தனி பிரதி ரூ. 5/–
ஆண்டு சந்தா ரூ. 60/–

# அன்பு பகிர்வு இயக்கம்

## செய்திமலர்

மலர் : 7
இதழ் : 12
அக்டோபர் – 2011



**நீங்கள்....**

**அப்பா பிதாவே, என்று**

**கூப்பிடப்பண்ணுகிற**

**புத்திரசுவிகாரத்தின்**

**ஆவியைப் பெற்றீர்கள்.**

ரோமர் 8:15

ஆசிரியர் சகோ. வே. தேவதாஸ்

சுதேச ஊழியர் சாட்சி

# Rev. காளு குண்டியா

மத்தியப்பிரதேசம்



இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்! எனது பெயர் காளுபாய் குண்டியா. நான் மத்தியப்பிரதேசத்தில் பட்ரா என்ற கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி.

எங்கள் பகுதியில் உள்ள மக்கள் அனைவரும் அந்தகாரத்திற்கும், பிசாசின் பிடிக்கும், பீடி, சாராயம், கொள்ளையடித்தல் போன்ற பாவங்களுக்கும் அடிமைப்பட்டவர்கள். இயேசு என்ற பெயரைக் கூட கேள்விப்படாதவர்களாய் வாழ்ந்து வந்தார்கள். மேலும் வியாதிகள் வந்தால் மந்திரவாதிகளையே நாடிச் செல்வார்கள். நானும் அநேக பாவங்களுக்கு அடிமைப்பட்டு ஒரு மதுபானப் பிரியனாக வாழ்ந்து வந்தேன்.


இந்த சூழ்நிலையில் வாழ்ந்து வரும்போது எனது மனைவியின் வயிற்றில் ஒரு கட்டி வந்து மூன்று ஆண்டுகளாக கஷ்டப்பட்டாள். நானும் வழக்கம்போல் மந்திரவாதிகளிடம் எனது மனைவியை அழைத்துச் சென்று அநேக மந்திரக் கிரியைகளுக்கு ஒப்புக் கொடுத்தேன். ஆனாலும் குணமாகவில்லை. ஆகவே மருத்துவர்களிடம் அழைத்துச் சென்று செலவு செய்து பார்த்தேன். ஆனாலும் கட்டி குணமாகவில்லை. என்ன செய்வதென்று தெரியாமல் இருந்த சூழ்நிலையில் எங்களது கிராமத்திற்கு பக்கத்துக் கிராமமான காளகேத்தில் இயேசுவின் கூட்டம் நடைபெறுகிறது என்றும், அதில் அநேகர் குணமடைகிறார்கள் என்றும் கேள்விப்பட்டு, அங்கு எனது மனைவியை அழைத்துச் சென்றேன்.

அன்று கூட்டத்தின் முடிவில் சுதேச ஊழியர் எங்களுக்கு இயேசு கிறிஸ்துவைக் குறித்துக் கூறி, எனது மனைவிக்காக பாரத்துடன் ஜெபித்தார். நாங்களும் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தோம். என்ன ஆச்சரியம் அந்த நேரமே அந்த கட்டி மறைந்துவிட்டது. தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

பின்பு இயேசு கிறிஸ்துவே மெய்யான தெய்வம் என்று அறிந்து, அறிக்கை செய்து பாவ மன்னிப்பை குடும்பமாக பெற்றுக் கொண்டு சபையில் இணைந்தோம். தேவன் ஊழிய பாரத்தைத் தந்து ஊழியம் செய்ய அழைத்தார். அழைப்பினை ஏற்று ஊழியத்திற்கு அர்ப்பணித்தேன். கடந்த 1999ம் ஆண்டு ஜனவரி மாதம் நாலுமாவடி திறப்பின் வாசல் ஜெபத்தில் வைத்து சகோ. மோகன் சி. லாசரஸ் அவர்களால் குடும்பமாக பிரதிஷ்டை செய்யப்பட்டோம். தற்போது B.Th., படித்து முடித்து 2009ம் ஆண்டு ஷாலோம் போதகராக அபிஷேகம் செய்யப்பட்டு ஊழியம் செய்து வருகிறேன். தொடர்ந்து எனக்காகவும், எனது குடும்பத்திற்காகவும் நான்கு பிள்ளைகளுக்காகவும், நாங்கள் செய்து வருகின்ற ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

இந்த சுதேச ஊழியரைத் தாங்குவோர் : **Jesus Redeems,** **Nalumavadi.**

# உங்கள் சகோதரனிடமிருந்து....



***கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே!***

*ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.*

இந்த அக்டோபர் மாத இதழ் மூலம் உங்களை சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இம்மட்டும் நம்மை நடத்தி வந்த தேவனை துதிப்போம்.

கடந்த செப்டம்பர் மாதத்தில் நாங்கள் திட்டமிட்டபடி, அனைத்து ஊழியங்களை நிறைவேற்ற தேவன் கிருபை தந்தபடியால் அவரைத் துதிக்கிறோம். தேவ கிருபையால் 3 மாநிலங்களில் 15 இடங்களில் சுதேச ஊழியர் குடும்பங்களுடன் மூப்பர்களையும் இணைத்து தரிசனக் கூட்டங்களை நடத்தினோம். விஷேசமாக 10 இலட்ச ஆத்துமாக்கள் திட்டத்தின் மூலமாக ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற 45 சுகமளிக்கும் நற்செய்தி கூட்டங்கள் குறிப்பாக அதிக மழை காரணமாக கிராம ஆலயங்களில் வைத்து நடைபெற்றது. இக்கூட்டங்கள் மூலமாக 815 அற்புதம் நடந்த சாட்சிகள் கிடைக்கப் பெற்றோம். 215க்கும் அதிகமான புதிய குடும்பங்கள் தேவனை ஏற்றுக்கொண்டு சபைகளுக்கு வருகை தருகிறார்கள்.

மேலும் செப்படம்பர் மாதத்திலும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் 12 இடங்களில் அதிகமாக 48 கிராம ஆலயங்களில் இத்திட்டத்தின்படி நடைபெற்று வருகிறது. ஆயிரத்திற்கும் அதிகமான சாட்சிகளையும், நூற்றுக்கணக்கான புதிய குடும்பங்களையும் தேவன் தந்து கொண்டேயிருக்கிறார். தேவனுக்கே மகிமை செலுத்துகிறோம். தொடர்ந்து தேவன் தரும் எழுப்புதலை கட்டி காத்து ஆத்துமாக்களை பின் தொடர் ஊழியம் செய்து மேய்ப்பர்கள், மூப்பர்களை உருவாக்கி பயிற்சி கொடுத்து ஸ்திரமான ஸ்தல சபைகளை கட்டி எழுப்பி இயேசுவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தப்படுத்த தேவ கிருபைக்காக ஜெபியுங்கள். நீங்கள் யாவரும் அதிகமாய் ஜெபிக்கவும் தாங்கவும் வேண்டுகிறோம்.

செப்டம்பர் மாதம் வேதப்புத்தகங்கள் வழங்குவதற்கான நிதி உதவி தேவை என வேண்டுதல் விடுத்து இருந்தோம். இதுவரை சுமார் 1600 வேதப்புத்தகங்களை வழங்க நிதி உதவி பெற்றுள்ளோம். இம்மாதத்தில் 1600 பேருக்கு சுதேச ஊழியர்கள் மூலமாக விசுவாசிகளுக்கு வழங்க உள்ளோம். இன்னும் 8400 வேத புத்தகங்கள் வழங்க, ஒரு வேதாகமத்திற்கு ரூ. 80/- வீதம் நிதி உதவி கிடைக்க ஜெபியுங்கள். உங்கள் பங்கினை மறவாது அனுப்புங்கள். மற்றவர்களுக்கு அறிமுகம் செய்து தாங்க முன் வாருங்கள்.

## *அக்டோபர் மாத ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்*

**ஷாலோம் மருத்துவ முகாம் மற்றும் ஆரம்ப சுகாதார பயிற்சி முகாம்**

கர்த்தருக்குச் சித்தமானால் அக்டோபர் 3ம் தேதி முதல் 8ம் தேதி வரை கீழ்க்கண்ட பகுதியில் மருத்துவ முகாம்கள் நடைபெற உள்ளன.

| நாள் | இடம் | மாநிலம் |
|---|---|---|
| 03–10–2011 திங்கள் | தாகோத் | குஜராத் |
| 04–10–2011 செவ்வாய் | மேக்நகர் | மத்தியபிரதேசம் |
| 05–10–2011 புதன் | ஜோபட் | மத்தியபிரதேசம் |
| 06–10–2011 வியாழன் | ஹேஜாமல் | இராஜஸ்தான் |
| 07–10–2011 வெள்ளி | கோய்க்கா | இராஜஸ்தான் |

மருத்துவ முகாம்கள் நடத்தும் மருத்துவர்கள் Dr. Abel , Dr. Inba, மற்றும் குழுவினர்கள் : Mrs. Jolly, Mrs. Shanthi, Mrs. Vanaja, Mrs. Angel, செவிலியர்கள் மற்றும் மருத்துவ துறை உதவியாளர்களுக்கு தேவன் நல்ல ஞானத்தை தரும்படியாக ஜெபியுங்கள். கொடுக்கப்படும் எல்லா சிகிச்சைகள், மருந்துகள் தேவ ஆசீர்வாதமாக அமையவும், பிரயாணங்களிலும், அனைத்து தொண்டுகளிலும் தேவ பாதுகாவல் கிடைக்கவும் ஜெபியுங்கள். அதே நாட்களில் 70 ஊழியக்காரிகளுக்கு ஆரம்ப சுகாதார பயிற்சிகளும் நடைபெற உள்ளன. மட்டுமல்லாமல் தேவையான நிதி உதவி ரூ. 70,000 கிடைக்க பெற ஜெபியுங்கள்.

**ஷாலோம் மிஷனெரி ஞாயிறு (SHALOM MISSION SUNDAY)**

பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின்படி இந்த வருடம் ஷாலோம் மிஷன் ஞாயிறு குஜராத் மாநிலத்தில் 09–10–2011 ஞாயிற்றுக்கிழமை அன்றும், மத்தியபிரதேசத்தில் 16–10–2011 ஞாயிற்றுக்கிழமை அன்றும், இராஜஸ்தான் மாநிலத்தில் 23–10–2011 ஞாயிற்றுக்கிழமை அன்றும் 600க்கும் மேற்பட்ட சபைகளில் தேவனை துதித்து கொண்டாடுகிறார்கள். 20 வருடங்களாக பீல் ஆதிவாசி மக்களுக்காக தேவன் தந்த தரிசன பணி ஷாலோம் பணிக்காக தேவனை துதித்தும் அடுத்த 10 வருடங்களில் முழு பீல் மக்கள் சந்திக்கப்படவும் குறிப்பாக 2015 ஆண்டிற்குள் 10 இலட்ச ஆத்துமாக்களை கிறிஸ்துவுக்குள் வழிநடத்தப்படவும் அனைவரும் தங்களை அர்ப்பணிக்க ஜெபியுங்கள்.

மட்டுமன்றி விசுவாசிகள் உதாரத்துவமாக காணிக்கைகளை வழங்கவும், போதகர்கள், ஊழியர்கள், மூப்பர்கள் தேவபயத்துடன், உண்மையாக எல்லாவற்றையும் நடத்தி காணிக்கைகளை சேகரிக்க ஜெபியுங்கள். அதை தொடர்ந்து குஜராத், மத்தியபிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் அக்டோபர் 10,17,24 ஆகிய திங்கட்கிழமைகளில் நடைபெறும் ஊழியர் கூடுகையில் மூப்பர்களும் வந்து காணிக்கைகளை அர்ப்பணிக்க ஜெபியுங்கள்.

மேலும் 20 வருட ஊழியங்களுக்காக, SHALOM DIOCESE திருச்சபைப் பணிகளுக்காக துதித்து காணிக்கை கொடுப்பது மட்டுமல்லாமல் ஒவ்வொரு விசுவாசியும் 20 குடும்பங்களை இவ்வருடம் கிறிஸ்துவண்டை சபைக்கு வழிநடத்த கொடுத்த ஆலோசனைப்படி ஆத்தும பாரத்துடன் செயல்பட ஜெபியுங்கள்.

**விஷேசித்த கூட்டங்கள் : பெண்கள் எழுப்புதல் மாநாடு**

மும்பை பட்டிணத்தில் உள்ள மெத்தடிஸ்ட் சபைகள் இணைந்து 06–10–2011 வியாழன்

அன்று நடத்தும் பெண்கள் எழுப்புதல் மாநாட்டில் சிறப்பு செய்திகளை வழங்க சகோதரி **வஹிதா தேவதாஸ்** அவர்கள் அழைக்கப்பட்டு உள்ளார்கள். தேவன் சகோதரியை வல்லமையாய் பயன்படுத்தவும், பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தையும், விடுதலையையும் அனைவரும் பெற்றுக்கொள்ளவும் சபையில் பெண்கள் மூலமாக எழுப்புதல் உண்டாக ஜெபியுங்கள்.

## குடும்ப ஆசீர்வாத முகாம்

மும்பை பட்டணத்தில் அந்தேரி பகுதியில் உள்ள மெத்தடிஸ்ட் சபைகளின் குடும்ப முகாம் கோவாவில் அக்டோபர் 26–28 தேதிகளில் (தீபாவளி விடுமுறை நாட்கள்) நடைபெற உள்ளது. அந்த முகாமிற்கு சிறப்பு செய்திகளை கொடுக்கும்படி நானும், என் மனைவியும் அழைக்கப்பட்டுள்ளோம். தேவன் எங்கள் குடும்பத்தை வல்லமையாக பயன்படுத்தவும் அனைத்து குடும்பங்கள் கிறிஸ்துவின் குடும்பங்களாக விளங்க உங்கள் ஜெபங்களை அதிகம் நாடுகிறோம்.

## சிறப்பு வாலிபர் தரிசன முகாம்கள்

வட இந்தியாவில் Vision India ஸ்தாபனத்தை சகோ. விஜய் அவர்கள் நிறுவி வல்லமையாக வாலிபர்கள் மத்தியில் ஊழியம் செய்து வருகிறார்கள். அவர்கள் மத்தியபிரதேசத்தில் போபாலில் அக்டோபர் 3–7 தேதிகளிலும் இராஜஸ்தானில் அஜ்மீரில் அக்டோபர் 21–25 தேதிகளில் குறிப்பாக வட இந்திய வாலிபர்களுக்காக தரிசனக் கூடுகைகளை ஒழுங்கு செய்துள்ளார்கள். பல தேவ தாசர்கள் செய்தி கொடுக்கிறார்கள். ஒவ்வொரு முகாமில் பல மாநிலங்களிலிருந்து 1500 முதல் 2000 வாலிபர்கள் பங்கு கொள்வார்கள். நான் தேவனுடைய வார்த்தையை ஊழிய அழைப்பும், தரிசனமும் தலைப்பில் செய்தி கொடுக்க போபாலில் அக்டோபர் 6ம் தேதியும் அஜ்மீரில் 25ம் தேதியும் அழைக்கப்பட்டுள்ளேன். தேவன் அடியேனை வல்லமையாக பயன்படுத்த வட இந்தியாவில் வாலிபர்கள் மத்தியில் எழுப்புதல் உண்டாகவும், ஆயிரமாயிரம் ஊழியர்கள் எழும்பவும், பரிசுத்த ஆவியானவரின் அருள் மாரி ஊற்றப்படவும் ஜெபியுங்கள்.

## சிறுவர்கள் மற்றும் வாலிபர்களுக்கான முகாம்கள்

கர்த்தருக்கு சித்தமானால் அக்டோபர் 11–15 மற்றும் அக்டோபர் 18 முதல் 22 வரை 10 நாட்கள் 3 மாநிலங்களிலும் சிறுவர்களுக்கான ஷாலோம் சிறுவர் முகாம்கள் மற்றும் வாலிபர்களுக்கான முகாம்கள் 10 இடங்களில் நடத்த ஜெபத்துடன் திட்டமிடப்பட்டுள்ளது. சகோதரி வஹிதா தேவதாஸ் தலைமையில் நடைபெற உள்ள இந்த முகாம்களில் குறைந்தது 3000க்கு அதிகமான சிறுவர்கள், வாலிபர்கள் கிறிஸ்துவுக்குள் பெலப்பட, நம் சபைகளுக்கு தூண்களாக விளங்க கருத்தாக ஜெபியுங்கள். முகாம்களுக்கான ஆயத்தங்கள், பிரயாணப் பாதுகாவல், தேவையான நிதி உதவி குறிப்பாக உணவு வழங்கவும், இதர செலவுக்காகவும் ரூ. 50,000/- கிடைக்கப் பெற ஜெபியுங்கள்.

## 10 இலட்ச ஆத்துமாக்கள் சந்திக்கும் திட்டம்

ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் 12 இடங்களில் தெய்வீக சுகமளிக்கும் கூட்டங்கள் 3 மாநிலங்களிலும் 48 இடங்களில் நடைபெற்று வருகிறது. 12 சுவிஷேச குழுக்களாக தேவனுடைய அபிஷேகத்தை பெற்ற பீல் சுதேச ஊழியர்களை தேவன் அபரிமிதமாக

பயன்படுத்தவும், எதிர்ப்புகள் நீங்கவும், தேவனுடைய பாதுகாவலுக்காகவும், புதிய புதிய குடும்பங்கள் ஆயிரம், ஆயிரமாக ஆண்டவரை ஏற்றுக்கொண்டு மந்தையில் சேரவும் ஜெபியுங்கள். இத்திட்டத்திற்காக ஜெபித்துத் தாங்கி வரும் இயேசு விடுவிக்கிறார் ஊழியங்களுக்காக தேவனை துதித்து ஜெபியுங்கள். அக்டோபர் 7,14,21,28 ஆகிய வெள்ளிக்கிழமைகளில் உபவாசித்து ஜெபியுங்கள். கூட்ட விபரங்கள், ஊழியர்கள் விபரம் தேவைப்பட்டால் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்கு அனுப்பி வைக்கிறோம்.

**திரளான தேவைகள் சந்திக்கப்பட ஜெபியுங்கள்**

சுமார் 1 கோடி பீல் மக்களை சந்திக்கும் இத்தரிசன பணிக்காக 450க்கும் அதிகமான சுதேச ஊழியர்கள் மற்றும் 100 பணித்தள அலுவலகம் மற்றும் திட்டங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கான ஆதரவுத் தொகை மற்றும் நிர்வாக செலவுகள், பணித்தளத்தில் அனுதின ஊழியங்கள், அனைத்தையும் நிறைவேற்ற குறைந்தது மாதந்தோறும் ரூ. 20 இலட்சங்கள் தேவைப்படுகிறது. மாதந்தோறும் ரூ. 500/- கொடுத்து ஜெபித்து தாங்கும் 1000 புதிய ஆதரவாளர்கள் எழும்ப ஜெபியுங்கள். மட்டுமன்றி, தயவாக நீங்கள் குறைந்தது 2 ஆதரவாளர்களை அறிமுகம் செய்து தரிசனப்பணியை நிறைவேற்ற முன் வாருங்கள்.

தொடர்ந்து எனக்காகவும், என் மனைவி வஹிதாவுக்காகவும், தேவன் எங்களை பயன்படுத்தவும், தேவன் எங்களை பாதுகாக்கவும் ஜெபியுங்கள், எங்கள் மூத்த மகன் **கிளாட்சன் டைட்டஸ்** அக்டோபர் மாதம் முதல் ஊழிய அனுபவப் பயிற்சிக்காக இயேசு அழைக்கிறார் ஊழியங்களுடன் இணைந்து பணிபுரிய இருக்கின்றார். மற்றும் **ஷாலோம்**–காவும், ரஷ்யாவில் மருத்துவம் பயிலும் **ஜாய் ஷெக்கினா** –விற்காகவும் ஜெபியுங்கள்.

நாங்களும் உங்கள் யாவருக்காவும் ஜெபித்து வருகிறோம். சுவிஷேச பணியில் உடன் பங்காளியாயிருக்கும் உங்கள் யாவரையும் கர்த்தர் தாமே ஆசீர்வதிப்பாராக. ஊழியத்தை குறித்து மேலும் விபரங்கள் அறிய மற்றும் உங்களுக்காக நாங்கள் ஜெபிக்க வேண்டுமென்றால் எங்களுடன் தொடர்பு கொள்ளவும். (Bishop. V. Devadass 09377445468, Sis. Vahitha Devadass 09376018006)

**"நீங்கள் சம்பூரணமாகச் சாப்பிட்டு, திருப்தியடைந்து, உங்களை அதிசயமாய் நடத்தி வந்த உங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பீர்கள், என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை".**

**"நான் இஸ்ரவேலின் நடுவில் இருக்கிறவரென்றும், நானே உங்கள் தேவனாகிய கர்த்தர், வேறொருவர் இல்லையென்றும் அறிந்துக்கொள்வீர்கள், என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை". –** யோவேல் **2: 26,27.**

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*



(Rt.Rev.Dr.V. தேவதாஸ்)

**மேலும் என்னுடன் தொடர்பு கொள்ள 09377445468**

## *ஷாலோம் ஜெபக் கூடுகைகள்*

தேவனுடைய பெரிதான கிருபையாலும் இரக்கத்தாலும் நமது ஷாலோம் ஜெபக் கூடுகைகள் நமது ஷாலோம் ஆதரவாளர்களின் இல்லங்களில் நடைபெற்று வருகிறது. இறுதி நாட்களில் தேவனுடைய ராஜ்ஜியம் கட்டப்பட ஜெபம் மிகவும் அவசியம், எனவே தேவனுடைய திட்டத்தின்படி இந்த நாட்களில் ஜெபக்கூடுகைகள் **ஒவ்வொரு மாதமும்** நடைபெற்று வருகின்றன. இந்தக் கூடுகைகளில் தேசத்திற்காக, ஊழியங்களுக்காக, ஊழியர்களுக்காக, குடும்பங்களுக்காக, ஜெபித்து வருகிறோம். தற்பொழுது நடைபெற்றுவரும் ஜெபக் கூடுகைகளின் விபரங்களை கீழே கொடுத்துள்ளோம்.

மேலும் உங்கள் இல்லங்களிலும், உங்கள் பகுதிகளிலும் ஜெபக்கூடுகைகள் நடத்த நீங்கள் விரும்பினால் நமது ஷாலோம் ஊழியர் **சகோ. ரதீஸ்குமார்** அவர்களைத் தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்கு ஆலோசனைகளையும், ஜெபக்குறிப்புகளையும் வழங்குகிறோம். தொடர்பு கொள்ள வேண்டிய ***செல் : 9600695598***

### *அக்டோபர் மாதம் ஜெபக்கூடுகைகள் நடைபெறும் விபரங்கள்*

| தேதி | நாள் | நேரம் | இடம் / தொடர்பு |
|---|---|---|---|
| 01.10.2011 | முதல் சனி | காலை 9.30 மணி | **Sharing Love Mission** தலைமை அலுவலகம், 5/168, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி – 8. செல் : 9345675468 |
| 07.10.2011 | முதல் வெள்ளி | மாலை 7 மணி | **சகோ. பாஸ்கர்,** ஸ்டேட் பேங்க் காலனி, தூத்துக்குடி – 2. செல் : 99940–25696 |
| 13.10.2011 | 2ம் வியாழன் | மாலை 7 மணி | **சகோதரி. பாத்திமா மேரி,** M.G.R. நகர் (பாலம்) திருச்செந்தூர் ரோடு தூத்துக்குடி – 8. செல் : 77080–72120 |
| 15.10.2011 | மூன்றாம் சனி | மாலை 6 மணி | **சகோ. ஜெயக்குமார்,** 2/328, 5 வது தெரு (Extn.) P&T காலனி, தூத்துக்குடி – 8. செல் : 9843379994 |
| 26.10.2011 | கடைசி புதன் | மாலை 7 மணி | **சகோ. சாமுவேல் ஜெயராஜ்,** 48, அண்ணாநகர் 10வது தெரு, தூத்துக்குடி – 8. செல் : 9789569737 |

***கர்த்தரால் ரட்சிக்கப்பட்ட ஜனமே, உனக்கு ஒப்பானவன் யார்?*** உபா. 33:29

# ஆவிக்குரியவன் யார்?



சிறப்புச் செய்தி : சகோதரி **வஹிதா தேவதாஸ்**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

***ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.***

**"தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள்".** (ரோமர் 8:9) கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவன் அல்ல. அப்படியானால் ஆவிக்குரியவன் கிறிஸ்துவின் ஆவியை உடையவன்.

வேதாகமத்தை மூன்று காலகட்டமாக பிரிக்கலாம். ஒன்று பழைய ஏற்பாட்டுக் காலம். அது சர்வ வல்லமையுள்ள தேவனின் காலம். இரண்டாவது புதிய ஏற்பாட்டுக் காலம். வார்த்தை மாம்சமாகி இயேசுவாக இவ்வுலகில் வந்து வெளிப்பட்ட காலம். மூன்றாவது காலம் அப்போஸ்தலரின் காலம். அது பரிசுத்த ஆவியானவர் வெளிப்பட்டு, கிறிஸ்துவை அற்புத அடையாளங்களின் மூலம் மக்களுக்கு வெளிப்படுத்தின காலம். இப்பொழுது நாம் வாழ்கின்ற காலத்தை பரிசுத்த ஆவியானவரின் காலம் என்றும் கூறலாம். ஏனென்றால், நான் போய் வேறொரு தேற்றரவாளனை உங்களுக்கு அனுப்புவேன் என்று சொல்லி, மாம்சமான யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவரின் அருள் மாரியைப் பொழிந்து கொண்டிருக்கிற காலம் இது. ஆகையால் நாம் ஆவிக்குரியவர்களாய் இருக்கிறோம்.

ரோமர் 8:5,6– வசனங்களில் கூறப்பட்டபடி, மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளை சிந்திக்கிறார்கள். ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். மாம்ச சிந்தை மரணம். ஆவியின் சிந்தையோ ஜீவனும், சமாதானமுமாம். ஆகையால் ஆவிக்குரியவன் ஆவியின் சிந்தையை உடையவன் ஆவான். இப்பொழுது இயேசு வந்து நம்மைப் பார்த்து மகனே, மகளே, நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்று கேட்கிறார். நாம் இயேசுவே எனக்கு ஆவிக்குரிய சிந்தை வேண்டும் என்று கூறுவோமா?

**1. ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட வேண்டும்.**

மத்தேயு 20:32–ல் வழியருகே உட்கார்ந்திருந்த இரண்டு குருடர்கள், இயேசு வருகிறார் என்று கேள்விப்பட்டு ஆண்டவரே! தாவீதின் குமாரனே! எங்களுக்கு இரங்கும் என்று கூப்பிட்டார்கள். ஆனால் ஜனங்கள் அவர்களை பேசாதிருக்கும்படி அதட்டினார்கள். காரணம் அவர்கள் சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்கள். புறக்கணிக்கப்பட்டவர்கள். ஆனாலும் அவர்கள் அதிகமாய்க் கூப்பிட்டார்கள். இயேசு நின்று அவர்களைத் தம்மிடத்தில் அழைத்து, "நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார். அதற்கு அவர்கள் ஆண்டவரே, எங்கள் கண்களைத் திறக்க வேண்டும் என்றார்கள். இயேசு மனதுருகி அவர்கள் கண்களைத் தொட்டார். உடனே அவர்கள் பார்வையடைந்து அவருக்குப் பின் சென்றார்கள்.

இந்த சம்பவத்தைப் பார்க்கும் போது நாம் இந்தக் குருடர்களைப் போல கண் தெரியாதவர்கள் அல்ல. ஆனால், நாம் ஆவிக்குரியவர்கள் என்ற தலைப்பில் பார்க்கும்போது, நாம் பரம்பரையாய் கிறிஸ்தவர்களாய் இருந்தாலும் கூட, நம்முடைய ஆவிக்குரிய கண்கள் திறக்கப்படாதவர்களாய் வாழ்கிறோம். ஆகையால் நாம் அநேக பிரச்சினைகள், போராட்டங்கள் மற்றும் வேதனைக்குள்ளாய்ச் சிக்கி, சமாதானமற்றவர்களாய் வாழ்கிறோம். எப்படி குருடர்களுக்கு மற்றவர்கள் வழிகாட்ட வேண்டிய நிலை உள்ளதோ, அப்படியே ஆவிக்குரிய கண்கள் திறக்கப்படாத வரைக்கும் நாம் மற்றவர்களையே நம்பி வாழ்கிறோம்.

கண்களில் ஒளி இல்லையென்றால், உலகமே இருண்டு விடும். அதைப் போல் ஆவிக்குரிய கண்கள் திறக்கப்படவில்லையென்றால், கிறிஸ்தவர்களாய் இருந்தும் நம் வாழ்க்கை ஒளி இல்லாமல் இருளாய்க் காணப்படும். ஆகையால் நாம் இயேசுவே என்னுடைய ஆவிக்குரியக் கண்களைத் திறந்தருளும் என்று கேட்போமா? உதாரணமாக, 2 இராஜாக்கள் 6 : 15–17 வசனங்களில் காண்கிறோம், ஆவிக்குரிய தீர்க்கதரிசியாகிய எலிசாவின் வேலைக்காரன் அதிகாலமே எழுந்து, வெளியே புறப்படுகையில் இராணுவமும், குதிரைகளும், இரதங்களும் பட்டணத்தைச் சுற்றிக் கொண்டிருக்கக் கண்டான். அவன் எலிசாவை நோக்கி ஐயோ என் ஆண்டவனே இப்பொழுது என்ன செய்வோம் என்றான். அதற்கு எலிசா கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணி "கர்த்தாவே இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும்" என்றான். உடனே கர்த்தர் அந்த வேலைக்காரனின் கண்களைத் திறந்தார்.

இதோ எலிசாவைச் சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளும், இரதங்களும் அந்த மலையில் நிறைந்திருக்கிறதை அவன் கண்டான். ஆம் பிரியமானவர்களே! வேலைக்காரனுடைய ஆவிக்குரிய கண்கள் திறக்கப்படாதவரைக்கும் அவன் உலகப்பிரகாரமான எதிர்ப்பு, போராட்டம், பிரச்சினை இவைகள் தான் அவன் கண்களுக்கு பெரிதாகத் தெரிந்து பயத்தைக் கொண்டு வந்தது. ஆனால் அவனுடைய ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டபோதோ, அவன் தேவனுடைய பாதுகாவல் அவர்களைச் சுற்றிலும் இருப்பதை அவர்களால் காண முடிந்தது. ஆம் பிரியமானவர்களே! நம்முடைய ஆவிக்குரிய கண்கள் நிச்சயம் திறக்கப்பட வேண்டும். அப்பொழுது தான் நம் ஆவிக்குரிய வாழ்க்கையில் ஒரு மாற்றம் உண்டாகும். நாம் ஆவிக்குரியவர்களாய் வாழ முடியும்.

**2. ஆவிக்குரிய விசுவாசம் வேண்டும்.**

2 இராஜாக்கள் – 4:13 – ல் **"நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்?"** என்று சூனேமியாளிடம் எலிசா கேட்பதைப் பார்க்கிறோம். சூனேமியாள் ஒரு கனம் பொருந்திய பெண், வசதி படைத்தவள், மட்டுமல்லாமல் அவள் ஆவிக்குரியவள். காரணம் 2 ராஜாக்கள் – 4 : 9 – ல் அவள் தேவனுடைய மனுஷனை **"இவர் பரிசுத்தவான் என்று காண்கிறேன்"** என்றாள். இவள் ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டவள்தான். ஊழியக்காரன் மீது கரிசனையும் அன்பும் கொண்டவள். ஆகையால் தன் வீட்டு மெத்தையின் மேல் ஒரு சிறிய அறை வீட்டைக் கட்டி அதில் எல்லா வசதிகளும் செய்து ஊழியக்காரனைத் தங்கும்படி செய்கிறாள். ஒரு நாள் எலிசா தன் வேலைக்காரன் கேயாசியின் மூலமாக **"நான் உனக்கு என்ன செய்ய**

**வேண்டும்?"** என்று கேட்க அனுப்பும் போது அவள் **"என் ஜனத்தின் நடுவே சுகமாய்க் குடியிருக்கிறேன்"** என்றாள். ஆனால் அவளுக்கு குழந்தை இல்லாதிருந்தது. அதை ஊழியக்காரனிடம் சொல்லவில்லை. அதற்குக் காரணம் என்னவென்றால், அவள் ஆவிக்குரியவளாய் இருந்தபடியால் அவளிடம் ஆவிக்குரிய பெருமை காணப்பட்டது. தான் அதிக அறிவாளி என்றும், எல்லாம் அறிந்தவள் என்றும் தப்புக் கணக்குப் போட்டாள். சிலர் ஆவிக்குரியவர்களாய் வாழ்ந்தால் தங்களுக்குள்ளே பெருமை கொள்வர். அதினிமித்தம் பூரண ஆசீர்வாதம் பெறாமல் இருப்பார்கள்.

2 இராஜாக்கள் – 4 :16 – ல் எலிசா அவளை அழைத்து, **"ஒரு பிராண உற்பத்தி காலத்திட்டத்திலே நீ ஒரு குமாரனை அணைத்துக் கொண்டிருப்பாய் என்றான்".** அதற்கு அவள் ஏது? உமது அடியாளுக்கு அபத்தம் சொல்ல வேண்டாம் என்றாள். இது அவளுடைய அவிசுவாசத்தைக் காட்டுகிறது. இந்த காலத்தில் ஆவிக்குரியவர்களும் அவிசுவாசியாய் இருப்பதைப் பார்க்க முடிகிறது. ஊழியரின் வார்த்தையின் மீது விசுவாசம் இல்லை. ஆனாலும் எலிசா பின்பு எந்த பதிலும் கூறவில்லை. மாறாக அவர் சொன்னபடியே ஒரு குமாரனைப் பெற்றாள். நமக்கும் ஆவிக்குரிய விசுவாசம் வேண்டும். ஆவிக்குரிய விசுவாசம் நம் வாழ்வில் அற்புதத்தைக் கொண்டு வரும்.

**3. ஆவிக்குரிய அபிஷேகத்தைக் குறித்த அறிவு வேண்டும்.**

2 இராஜாக்கள் 4:2–ல் விதவையிடம் எலிசா **"நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்?"** என்று கேட்கிறார். அந்த விதவை, ஒரு தீர்க்கதரிசியின் மனைவி. அவள் புருஷன் கர்த்தருக்குப் பயந்து நடந்தவன். இவளும் ஒரு ஊழியக்காரி. ஆனாலும் இவள் எலிசாவிடம் தன் குறைவைக் கூறுவதைப் பார்க்கிறோம். கடன் கொடுத்தவன், இப்போது என் இரண்டு குமாரரையும் அடிமையாக்கிக் கொள்ள வந்தான் என்று புலம்புவதைப் பார்க்கிறோம். தன்னிடம் உள்ளதை அவள் மறந்து விடுகிறாள். ஆகையால் தான் எலிசா நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்று மட்டும் கேட்காமல் **"உன்னிடத்தில் என்ன இருக்கிறது சொல்?"** என்று கேட்டார். நம்மில் அநேகர் இப்படித்தான். நாம் ஆவிக்குரிய அபிஷேகம் பெற்றிருந்தாலும் கூட அந்த அபிஷேகத்தைக் குறித்து அறிவு இல்லாதவர்களாய் வாழ்கிறோம். எப்பொழுதும் குறைவையே பார்த்துப் பார்த்து, சொல்லிச் சொல்லி, வேதனையடைகிறோம்.

உன்னிடம் என்ன இருக்கிறது என்று கேட்டவுடன், அவள் சொல்லுகிறாள். ஒரு குடம் எண்ணெய் அல்லாமல் உமது அடியாளுடைய வீட்டில் வேறொன்றும் இல்லை என்றாள். அப்படியானால் இதைக் கொண்டு நான் என்ன செய்ய முடியும்? என்று தான் நினைத்தாள். எண்ணெய் என்பது விலையேறப்பெற்ற அபிஷேகத்தைக் குறிக்கிறது. ஆனால் அவள் அதை அறியவில்லை. நாமும் கூட, அப்படித்தான், நம்மிடத்தில் உள்ள அபிஷேகத்தைக் கொண்டு என்ன செய்ய முடியும் என்று சோர்ந்து போகிறோம். ஆனால் நடந்தது என்ன? எலிசா, அண்டை வீடுகளில் போய் காலியான பாத்திரங்களைக் கேட்டு வாங்கி உன் பிள்ளைகளுடன் உள்ளே போய் கதவைப் பூட்டி, அந்தப் பாத்திரங்கள் எல்லாவற்றிலும் வார்த்து, நிறைந்ததை ஒருபக்கத்தில் வை என்றான். அந்தப்படியே அவள் செய்தாள். வேறே பாத்திரம் இல்லை

என்றதும் எண்ணெய் நின்று போயிற்று. நீ போய் அந்த எண்ணெயை விற்று, உன் கடனைத் தீர்த்து, மீந்ததைக் கொண்டு நீயும் உன் பிள்ளைகளும் ஜீவனம் பண்ணுங்கள் என்றான்.

பிரியமானவர்களே! அண்டை வீடுகளில் போய் என்றால், பக்கத்து வீடுகளில் வசிக்கிற வெறுமையான ஆத்துமாக்களைக் கொண்டு வந்து உன்னிடத்தில் இருக்கிற அபிஷேகத்தை (எண்ணெயை) மற்றவர்களுக்கு அதாவது காலியான பாத்திரங்களில் நிரப்ப வேண்டும். எல்லாரும் நிரம்பும் வரை ஊற்று. ஆவிக்குரியவர்கள் மற்றவர்களும் அபிஷேகம் பெற வேண்டும் என்ற கரிசனம் உள்ளவர்கள். உன்னுடைய குறைகளையோ, மற்றவர்களின் குறைகளையோ பேசக்கூடாது. மற்றவர்கள் குறைகளை நாம் தீர்க்க வேண்டும்.

ஆவிக்குரியவர்கள் மற்றவர்களை நிரப்ப வேண்டும். மற்றவர்களுக்கு ஊற்றும் போது உன் இருதயம் நிரம்பும், உன் வீடு நிரம்பும். ஆவிக்குரிய மற்றும் உலகப் பிரகாரமான ஆசீர்வாதமும் கிடைக்கும். ஒவ்வொரு கிறிஸ்தவர்களுக்கும் ஆவிக்குரிய அபிஷேகத்தைக் குறித்த அறிவு வேண்டும். அபிஷேகம் உன் குறைவை நிறைவாக்கும். அபிஷேகம் உன்னை உயர்த்தும்.

**4. ஆவிக்குரிய வைராக்கியம் வேண்டும்.**

எஸ்தர் – 5:3–ல் ராஜா எஸ்தரை நோக்கி, “ராஜாத்தியே உனக்கு என்ன வேண்டும்? நீ ராஜ்ஜியத்தில் பாதிமட்டும் கேட்டாலும் உனக்குக் கொடுக்கப்படும்” என்றான். ஆனால் எஸ்தரோ 7:3–ல் ராஜாவே, என் வேண்டுதலுக்கு என் ஜீவனும், என் மன்றாட்டுக்கு என் ஜனங்களும் வேண்டும் என்று கேட்டாள். ஆத்துமாக்களை, தன் சொந்த ஜனத்தை மீட்கும்படியாக உபவாசித்து ஜெபிக்கிறதைப் பார்க்கிறோம். இது தான் ஆவிக்குரிய வைராக்கியம். தன் உயிரையும் பணயம் வைத்து துணிந்து ராஜாவிடம் சென்று மக்களுக்காக வைராக்கியம் காட்டினாள். இது தான் ஆவிக்குரிய வைராக்கியம்.

இராஜ்ஜியத்தில் பாதி தந்தாலும் எனக்கு அது வேண்டாம். “என் மன்றாட்டுக்கு என் ஜனங்கள் வேண்டும்” என்று சொல்லிப் பொருளாசையை வெறுத்தாளே இது தான் ஆவிக்குரிய வைராக்கியம். எஸ்தருடைய ஆவிக்குரிய வைராக்கியத்தின்படி, யூதருக்கு வெளிச்சமும், மகிழ்ச்சியும், களிப்பும், கனமும் உண்டாயிற்று. நீயும் எஸ்தரைப் போலக் கேட்பாயா? பணம், சொத்து, ஆஸ்தியை விட என் குடும்பம், பிள்ளைகள் இரட்சிக்கப்பட்ட வேண்டுமே! என் தேசம் என் தேவனை அறியணுமே! என்ற ஆத்மபாரத்தோடு ஜெபிப்போமா?

**5. ஆவிக்குரிய வரங்களின் மீது வாஞ்சை வேண்டும்.**

1 கொரிந்தியர் – 12 :1–ல் அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்தியருக்கு இவ்வாறு கூறுகிறார் : **“அன்றியும் சகோதரரே ஆவிக்குரிய வரங்களைக் குறித்து நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை”** என்று கூறி அதே அத்தியாயத்தில் ஆவிக்குரிய ஒன்பது வரங்களைக் குறித்துப் பேசுகிறார். ஆம் பிரியமானவர்களே! இந்த வரங்கள் நமக்கு இலவசமாய் தேவன் தருகிற பரிசு. ஆனால் நாம் அதை வாஞ்சித்துப் பெற்றுக் கொள்ள வேண்டும். நாம் ஆவிக்குரியவர்களாய் இந்த வரங்களை நாட வேண்டும். மட்டுமல்லாமல்,

1 கொரி – 14:12–ல் நீங்களும் ஆவிக்குரிய வரங்களை நாடுகிறவர்களானபடியால், சபைக்கு பக்தி விருத்தி உண்டாகத்தக்கதாய் அவைகளில் தேறும்படி நாடுங்கள். சபையானது சாதாரணமான காரியங்களைச் செய்யாதபடி, அசாதாரணமான காரியங்களைச் செய்யும் ஆவிக்குரிய சபைகளாய் மாற வேண்டும். நாம் ஆவிக்குரிய வரங்களை நாடிப் பெற்றுக்கொள்ளும் போது, சபை பக்தி விருத்தி அடையும். மட்டுமல்லால், அனுதினமும் இரட்சிக்கப்படுகிறவர்கள் சபையிலே சேர்க்கப்படுவார்கள்.

2 ராஜாக்கள் – 2 : 9–ல், எலியா, எலிசாவிடம் “நான் உனக்கு செய்ய வேண்டியது என்ன? கேள்” என்றார். அதற்கு அவன் 2 ராஜா. – 9:5–ல், உம்மிடத்திலுள்ள வரம் இரட்டிப்பாக வேண்டும்” என்றான். எலிசாவுக்கு வரத்தின் மேல் வாஞ்சை. (தாழ்மையோடும், பொறுமையோடும் எலியாவைப் பின் தொடர்ந்து அதைப் பெற்றுக் கொண்டான்) ரோமர் – 8:5–ல் ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். எலிசா ஆவிக்குரிய வரங்களை எப்படி எலியாவிடமிருந்து பெற்றுக் கொள்வது என்ற சிந்தையிலேயே அவன் பின் சென்றான். எனவே இரட்டிப்பாய்ப் பெற்றான். நாம் ஆவிக்குரிய வரங்களை வாஞ்சிக்கும்போது நமக்கு இரட்டிப்பாய்க் கொடுத்து நிச்சயம் நம்மை நம் குடும்பத்திற்கும், சபைக்கும் ஆசீர்வாதமாக மாற்றுவார். தேவன் தாமே நமக்குள் தங்கி நம்மை ஆவிக்குரியவர்களாய் மாற்றி ஆசீர்வதிப்பாராக!

## SHALOM LIFE MEMBERSHIP ENROLMENT


## `ôúXôm F¯V BÙs LôX AeLj§]WôL AûZl×

***கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,*** ஆவியானவரின் வழிநடத்துதலின்படி ரூ. 1000/– ஒரு முறை செலுத்தி ஷாலோம் ஊழியத்தின் ஆயுள் கால அங்கத்தினராக இணையும்படி அன்புடன் அழைக்கிறோம்.

இந்தத் திட்டத்தில் இணைந்தவுடன் உங்களுக்கு சிறப்புச் சான்றிதழ், மாதம்தோறும் பத்திரிகை, மற்றும் வருடம் ஒருமுறை ஊழிய வளர்ச்சிக் குறித்த சிறப்பு அறிக்கை அனுப்பப்படும். உங்களுக்காக நாங்கள் தொடர்ந்து ஜெபித்து வருகிறோம். மேலும் இந்தத் திட்டத்தின் மூலம் வரும் நிதியினால் மாதாந்திர செலவினங்கள் ஏற்ற காலங்களில் செய்யப்படவும், நிதி நெருக்கடி நேரங்களை சமாளிக்கவும், ஒரு சிறப்பு வைப்பு நிதியாக வைக்கத் தீர்மானித்துள்ளோம்.

இவ்வருட இறுதிக்குள்ளாக, குறைந்தது 1000 அங்கத்தினர்கள் இணைக்கப்பட ஜெபித்து வருகிறோம். இதுவரை 207 உறுப்பினர்கள் ஆயுள்கால அங்கத்தினராக இணைந்துள்ளனர். முதலாவது நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் அங்கத்தினராக இணையுங்கள், மேலும் உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு இத்திட்டத்தை அறிமுகப்படுத்துங்கள். உங்களுக்கு மிகவும் நெருக்கமானவர்களில் குறைந்தது 5–லிருந்து 10 பேருக்காவது இத்திட்டத்தை அறிமுகப்படுத்த சிறப்பு ரசீதுகளும், ஊழிய அறிமுக அறிக்கைகளும் அனுப்புகிறோம். நீங்கள் இந்தத் திட்டத்திற்காக உதவி செய்து, பீல் மக்கள் மத்தியில் தேவனுடைய ராஜ்ஜியம் விரைவாக கட்டப்பட உதவுங்கள். தேவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

# நினைவுப்படுத்துகிறோம்......



அன்பின் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! இந்த அக்டோபர் மாதத்தில் நுழைந்திருக்கும் நாம் இந்த ஆண்டு வரப்போகின்ற கிறிஸ்மஸைக் கொண்டாட நாம் ஜெபித்து இப்பொழுதே ஆயத்தப்படுவது நமது கடமையாகும். மேலும் நமது பணித்தளங்களில் நாம் தாங்கி வரும் பீல் ஆதிவாசி விசுவாசிகள் மற்றும் சுதேச ஊழியர்களின் பிள்ளைகள் நன்றாக படித்து வருகிறார்கள்.

நாம் அவர்களுக்கு கிறிஸ்மஸுக்காக ஏதாவது செய்தாக வேண்டும். ஆகவே நீங்கள் எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உண்டியலில் அந்த ஆதிவாசி பிள்ளைகளுக்கென காணிக்கைகளை சேகரித்து வைத்திருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறோம். இந்த காணிக்கையை ஆதிவாசி பிள்ளைகளின் கிறிஸ்மஸ் தேவைகளுக்காகக் கொடுப்பீர்கள் என்று விசுவாசிக்கிறோம்.

பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக அனுதினமும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களுக்காகவும், உங்களுடைய குடும்பத்திற்காகவும் அனுதினமும் ஜெபிக்கிறோம். நீங்கள் பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக கொடுக்கும் தொகையை எங்கள் பிரதிநிதிகள் மூலமாக கொடுக்கலாம்.

அல்லது எங்களது தலைமை அலுவலகத்திற்கு நேரில் வந்து கொடுக்கலாம் அல்லது உண்டியலைத் திறந்து எடுத்து **M.O / D.D / Cheque** மூலமாக **SHARING LOVE MISSION** என்ற பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்களின் தெளிவான முகவரியுடன், **உண்டியலின் எண்ணையும்** எழுதி அனுப்ப மிக அன்போடு கேட்கிறேன்.

உங்களுக்கு உண்டியலைத் திறக்க சாவி **(Key)** வேண்டுமானால் **9345675468** – இந்த செல் நம்பருக்கு தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு சாவியை **(Key)** அனுப்பி வைக்கிறோம்.

### ஷாலோம் கிளை அலுவலகங்கள்

***Bro. B. Ebenezer Daniel***

New no:38 Old No:76A, 2nd Floor,
3rd St, Gill Nagar, Choolaimedu,
Chennai, Tamil Nadu 600 094

Cell : 934 44-75468

***Bro. G. Selvadurai***

Kalikal House, Near A.G.Church
Gnaramvilai, Pacode.P.O K.K Dist,
Tamil Nadu 629168

Cell : 94876-89869

## ஷாலோம் மற்றும் இயேசு விடுவிக்கிறார் இணைந்து செயல்படுத்தும் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் 10 இலட்சம் ஆத்துமாக்கள் அறுவடைப் பணி (2011 - 2015)

பரிசுத்த ஆவியானவரின் திடமான வழி நடத்துதலின்படி, பீல் சுதேச ஊழியர்களில் விசேஷமாய் கர்த்தரால் தேர்ந்தெடுக்கப்பட்ட 48 ஊழியர்கள் குடும்பமாக நாலுமாவடி வந்து **இயேசு விடுவிக்கிறார் விசேஷித்த பயிற்சி முகாமில்** பங்கு பெற்று, புதிய தரிசனங்களோடும், அபிஷேகம் மற்றும் வரங்களோடும், மிகுந்த உற்சாகம் மற்றும் வைராக்கியத்தோடும் பணித்தளம் வந்து சேர்ந்தார்கள்.

பின்பு பயிற்சி பெற்ற 48 ஊழியர்கள், 12 குழுக்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் 12 இடங்களில் அற்புத சுகமளிக்கும் கூட்டங்கள் நடத்தும்படியாக அனுப்பப்பட்டார்கள். கடந்த ஆகஸ்ட் மாதம் 19ம் தேதியிலும், 26ம் தேதியிலும் குஜராத், இராஜஸ்தான் மற்றும் மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் மொத்தம் 24 இடங்களில் சுகமளிக்கும் கூட்டம் நடைபெற்றது. தேவன் மிகவும் வல்லமையாய் ஊழியர்களை பயன்படுத்தினார். நடந்த கூட்டங்களில் மொத்தம் 8075க்கும் அதிகமானோர் கலந்து கொண்டு, தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றார்கள்.

சுமார் 221 குடும்பத்தார் புதிதாக பங்கு பெற்று, நோய்கள், பேய்கள் இவற்றிலிருந்து விடுதலை பெற்றார்கள். மட்டுமல்லாமல் 814க்கும் அதிகமான அற்புத சாட்சிகளை தேவன் எழுப்பினார். தேனுக்கே மகிமை உண்டாவதாக!

தொடர்ந்து இந்த ஊழியங்களுக்காக, அதாவது தங்கள் சொந்த மக்கள் மத்தியில் தாங்களே எழும்பி சுகமளிக்கும் கூட்டம் நடத்துகிற இவர்களுக்காக ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அரை மணி நேரமாவது ஒதுக்கி ஜெபியுங்கள். உங்கள் ஜெபம் நிச்சயமாய் ஊழியர்களுக்கு உந்துகோலாக அமையும். ஆதி அப்போஸ்தலர் காலம் நிச்சயம் திரும்பி வரும். தேவன் பலத்த கிரியைகளைச் செய்ய ஆரம்பித்துவிட்டார். அவர் நிச்சயம் தரிசனத்தை நிறைவேற்றுவார்.

இந்த கூட்டங்களில் நடைபெற்ற சில அற்புதங்களை இங்கேயும் நடுப்பக்கங்களிலும் தந்துள்ளோம். வாசித்து தேவனை மகிமைப்படுத்துங்கள்....

பெயர் : **கும்ஜிபேன் மெய்டா,** மாநிலம் : **மத்தியப்பிரதேசம்**

நான் கடந்த ஆறு மாதமாக மன நிலை சரியில்லாமல் இருந்தேன். இந்த நிலையில் கேடி கிராம ஷாலோம் சபையில் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு போதகர் **ஹிம்ராஜ் பபேரியா** அவர்கள் தேவ செய்தியளித்து, வியாதியஸ்தர்களுக்காக பாரத்தோடு தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணிளார்கள். அவ்வேளையில் தேவன் என்னை முற்றிலுமாகக் குணமாக்கினார். இப்போது எனது மன நிலை நன்றாக உள்ளது. எனக்கு சுகம் தந்த தேவனுக்கு ஸ்தோத்திரம்.

பெயர் : **கீதாபேன் புரியா,** மாநிலம் : **மத்தியப்பிரதேசம்**

நான் கடந்த இரண்டு வருடங்களாக ஆஸ்துமா வியாதியினால் மிகவும் கஷ்டப்பட்டேன். 26.08.2011 அன்று தாந்தல்புரா கிராம ஷாலோம் சபையில் வைத்து நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தில் கலந்து கொண்டேன். அங்கு போதகர் தேவ்சிங் ஹோகரி அவர்கள் தேவ செய்தியளித்து, வியாதியஸ்தர்களுக்காக பாரத்தோடு தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணினார்கள். அவ்வேளையில் தேவனுடைய வல்லமை என் மீது இறங்கியதை என்னால் உணர முடிந்தது. நான் தெய்வீக சுகம் பெற்றேன். இப்பொழுது என்னால் நன்றாக சுவாசிக்க முடிகிறது. தேவனுக்கே மகிமை!

பெயர் : **நார்சிங் டாமோர்,** மாநிலம் : **இராஜஸ்தான்**

நான் ஒரு சில வருடங்களாக பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டு, கை, கால்களை அசைக்கவும், நடக்கவும் முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டு வந்தேன். இந்த சூழ்நிலையில் 26.08.2011 அன்று பேடப் நாதா கிராம ஷாலோம் சபையில் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தில் கலந்து கொண்டேன். அங்கு போதகர் ரத்தன் மாவி அவர்கள் தேவ செய்தியளித்து, வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்தபோது, தேவன் எனக்கு அற்புத சுகத்தைத் தந்தார். இப்பொழுது என்னால் நன்றாக கை, கால்களை அசைக்கவும், என்னால் நடக்கவும் முடிகிறது. தேவனுக்கே மகிமை!

பெயர் : **ஹக்ரிபேன்,** மாநிலம் : **மத்தியப்பிரதேசம்**

நான் சிறு வயதிலிருந்தே ஆஸ்துமா வியாதியினால் மிகவும் கஷ்டப்பட்டேன். நான் குணமாவதற்கு எத்தனையோ மந்திரவாதிகளிடம் சென்றும் ஒரு பயனுமில்லை. இந்த சூழ்நிலையில் கடந்த 26.08.2011 அன்று விசல்பூர் கிராம ஷாலோம் சபையில் நடைபெற்ற சுகமளிக்கும் ஆராதனையில் கலந்து கொண்டேன். அங்கு போதகர் ஜினு மாவி அவர்கள் தேவ செய்தியளித்து, வியாதியஸ்தர்களுக்காக பாரத்தோடு ஜெபம் பண்ணினார்கள். அப்பொழுது தேவன் எனக்கு தெய்வீக சுகத்தைத் தந்தார். இப்பொழுது நான் நன்றாக சுவாசிக்கிறேன். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

## *உங்களுக்கு உதவ எங்களுக்கு உதவுங்கள்...*

*அன்பான ஆதரவாளர்களே,*

உங்களது முகவரியில் மாற்றங்களோ அல்லது திருத்தங்களோ இருந்தால், மேலும் உங்களது முகவரி மாறும்போதோ நீங்கள் தவறாது எங்களுடன் தொடர்புகொண்டு எங்களிடம் அவற்றை உடனடியாக தெரிவிக்க அன்பாய்க் கேட்கிறோம்.

இது நாங்கள் உங்களுடன் சரியாக தொடர்பு கொள்ளவும், நாங்கள் அனுப்பும் கடிதங்கள், பத்திரிகைகள், ஊழிய அறிக்கைகள், ரசீது, தபால்கள் சரியாக உங்களுக்குக் கிடைக்கவும் உதவும். மேலும் உங்களது தொலைபேசி மற்றும் மொபைல் எண்களை எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.

# ஞாயிறு பள்ளி ஆசிரியர் பயிற்சி

கர்த்தருடைய பெரிதான கிருபையினாலும், பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலின்படியும், குஜராத், இராஜஸ்தான் மற்றும் மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களிலுள்ள நமது ஷாலோம் சபைகளில் பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கென்று ஞாயிறு வேதாகம வகுப்புகளை நடத்துவதற்காக ஆசிரியர் பயிற்சி குஜராத் தாகோத்திலுள்ள பயிற்சி கூட்டத்தில் வைத்து நடத்தப்பட்டது.

குஜராத் சபைகளுக்கு 11.08.2011 அன்று நடத்தப்பட்டது, இதில் 73 ஆசிரியர்கள் பங்கு பெற்றனர். மத்தியப்பிரதேசம் சபைகளுக்கு 13.08.2011 அன்று நடத்தப்பட்டது, இதில் 91 ஆசிரியர்கள் பங்கு பெற்றனர். இராஜஸ்தான் சபைகளுக்கு 29.08.2011 அன்று நடத்தப்பட்டது, இதில் 140 ஆசிரியர்கள் பங்கு பெற்றனர்.

ஒவ்வொரு பயிற்சி நாளும் ஜெபத்துடன் ஆரம்பிக்கப்பட்டு, துதி ஆராதனை ஏறெடுக்கப்பட்டது. ஆராதனை வேளையில் பயிற்சிக்கு வந்திருந்த அனைவரும் உற்சாகத்துடன் நடனமாடி தேவனைத் துதித்து, முழு உள்ளத்தோடு ஆராதித்தார்கள். கர்த்தருடைய மகிமை வெளிப்பட்டது. அதன்பின் **சகோதரி வஹிதா தேவதாஸ்** அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் நிறைவோடு அளித்த செய்திகளில் "யாரை நான் அனுப்புவேன்? யார் நமது காரியமாய் போவான்?" என்ற பரிசுத்த ஆவியானவரின் அறைகூவலுக்கு "இதோ அடியேன், என்னை அனுப்பும்" என்று தங்களை அர்ப்பணித்து சிறு பிள்ளைகளை தேவனிடத்தில் வழி நடத்த வேண்டும் என்ற தீர்மானத்தோடு கண்ணீரோடும், ஆத்தும பாரத்தோடும் ஜெபித்தார்கள். அதன்பின் அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது.

மட்டுமல்லாமல் ஞாயிறு பள்ளி எப்படி நடத்த வேண்டும், சிறுவர்களை எப்படி உற்சாகப்படுத்த வேண்டும்? மனப்பாட வசனங்களை எப்படி கற்றுக் கொடுக்க வேண்டும்? என்ற காரியங்களையும், மேலும் வேதத்திலுள்ள சம்பவங்களை எப்படி கதை மற்றும் நாடகங்கள் மூலமாக சிறு பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்ற தலைப்புகளில் ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. அதன்பிறகு அனைவருக்கும் ஞாயிறு பள்ளி வேதபாட புத்தகங்கள், காணிக்கைப் பெட்டிகள், பதிவேடுகள் வழங்கப்பட்டன. ஜெபத்துடன் பயிற்சிகள் நிறைவு பெற்றன. கலந்து கொண்ட அனைவருக்கும் இரவு உணவும் வழங்கப்பட்டது.



தேவன்தாமே இந்த பயிற்சிகளை ஆசீர்வதித்து பீல் ஆதிவாசி சிறுவர் மத்தியில் பெரிய அறுவடையைத் தர மறவாமல் ஜெபியுங்கள். **தேவனுக்கே மகிமை உண்டாவதாக!**

# ஞாயிறு பள்ளி ஆசிரியர் பயிற்சி முகாம்கள்



தேவனை ஆராதிக்கும் குஜராத் ஞாயிறுபள்ளி ஆசிரியர்கள்



ஜெபவேளையில் மத்தியப்பிரதேசம் ஞாயிறுபள்ளி ஆசிரியர்கள்





Action பாடல் வேளை



ஜெபவேளை



செய்தி வேளையில் சகோதரி வஹிதா தேவதாஸ்



மனப்பாட வசனம் போதித்தல்



குறு நாடக வேளை

# ஷாலோம் – இயேசு விடுவிக்கிறார் – 10 இலட்ச ஆத்துமாக்கள் அறுவடைத் திட்டம்
## 19.08.2011 முதல் 26.08.2011 வரை முதற்கட்ட சுகமளிக்கும் கூட்டங்களில் நடைபெற்ற அற்புத சாட்சிகளில் சில

பெயர் : **சபி பேன்** ஊர் : நகரேலா, குஜராத்



எனது கழுத்துப்பகுதியில் ஐந்து ஆண்டுகளாக ஒரு கட்டி இருந்தது. எனக்கு பேசுவதற்கே மிகவும் கஷ்டமாக இருக்கும். கட்டி குணமாக வேண்டும் என்று இதுவரை ரூ. 25,000/–க்கும் அதிகமாக மருத்துவத்திற்காக செலவு செய்தோம். ஆனால் குணமாகவில்லை. 23.08.11 அன்று நகரேலா கிராம ஷாலோம் சபையில் நடைபெற்ற சுகமளிக்கும் ஆராதனையில் கலந்து கொண்டேன். அங்கு போதகர் பால் முனியா அவர்கள் தேவ செய்தியளித்து, வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்தார்கள். ஜெப வேளையில் தேவனுடைய வல்லமை என் மீது இறங்கியது. உடனே எனது கழுத்தில் இருந்த கட்டி மறைந்தது. என்னால் இப்பொழுது நன்றாக பேச முடிகிறது. அற்புதம் செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம்.

---



பெயர் : **பினா பேன்** ஊர் : பாட்டன்புரா, குஜராத்

நான் பல மாதங்களாக கழுத்து வலியினால் மிகவும் கஷ்டப்பட்டு வந்தேன். என்னால் கழுத்தை அசைக்க முடியாது. இந்த சூழ்நிலையில் 19.08.2011 அன்று விசல்பூர் கிராமத்திலுள்ள ஷாலோம் சபையில் நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தில் கலந்து கொண்டேன். அங்கு போதகர் மோகன் காட் அவர்கள் தேவ செய்தியளித்து வியாதியஸ்தர்களுக்காக ஜெபம் செய்யும் போது தேவ வல்லமை என் மீது இறங்கியது தெய்வீக சுகம் பெற்றேன். இப்பொழுது என்னால் கழுத்தை நன்றாக அசைக்க முடிகிறது. தேவனுக்கே ஸ்தோத்திரம்!

---

பெயர் : **கங்காபேன் (வயது : 40)** ஊர் : பாலாசியா, குஜராத்



எனக்கு அநேக நாட்களாக இரண்டு கால்களிலும் வீக்கம் அதிகமாக இருந்தது. இரண்டு காலையும் என்னால் மடக்க முடியாது. மேலும் வேதனை அதிகமாக இருந்து வந்தது. 19.08.2011 அன்று சிமளியா கிராம சபையில் நடைபெற்ற சுகமளிக்கும் ஆராதனையில் கலந்து கொண்டேன். அங்கு போதகர் ரன்சிங் பாபோர் அவர்கள் தேவ செய்தியளித்து, வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்த நேரத்தில் நானும் விசுவாசத்துடன் ஜெபம் பண்ணினேன். அந்த நேரத்தில் தேவன் எனக்கு பரிபூரண சுகம் கொடுத்தார். என் கால்களை நன்றாக மடக்க முடிகிறது. தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

பெயர் : **ஹூம்ளி பேன்**

ஊர் : வரம்கேடா, குஜராத்



என்னுடைய இடது கையை என்னால் அசைக்கவோ, உயர்த்தவோ முடியாது. வலியினால் மிகவும் கஷ்டப்பட்டேன். 19.08.2011 அன்று ஷாலோம் சபையில் வைத்து நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தில் கலந்து கொண்டேன். அங்கு போதகர் பூர்சன் புரியா அவர்கள் தேவ செய்தியளித்து வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்தார். அப்பொழுது தேவன் எனது இடது கையைத் தொட்டு அற்புத சுகத்தைத் தந்தார். இப்பொழுது என்னால் கையை நன்றாக அசைக்கவோ உயர்த்தவோ முடிகிறது. தேவனுக்கே மகிமை!

---



பெயர் : **மோதிபாய் பளாஸ்**

ஊர் : அப்லோடு, குஜராத்

எனக்கு பிறவியில் இருந்தே இரண்டு காதுகளும் கேட்காது. 19.08.2011 அன்று எங்களது கிராமத்திலுள்ள ஷாலோம் சபையில் வைத்து நடைபெற்ற சுகமளிக்கும் கூட்டத்தில் கலந்து கொண்டேன். போதகர் ஈஸ்வர்லால் டோடியார் அவர்கள் தேவ செய்தியளித்து வியாதியஸ்தர்களுக்காக பாரத்துடன் ஜெபித்தார்.

நானும் விசுவாசத்துடன் ஜெபம் செய்தேன். அந்த கூட்டத்தில் தேவன் எனது காதுகளைத் தொட்டார். ஆம் இப்பொழுது என்னால் நன்றாக கேட்க முடிகிறது. உயிரோடிருந்து அற்புதங்களை செய்துவரும் தேவனுக்கு மகிமை செலுத்துகிறோம்.

---

பெயர் : **சன்னுபேன்**

ஊர் : லசே, குஜராத்



நான் கடந்த 30 ஆண்டுகளாக கால் வலியினால் கஷ்டப்பட்டு மிகவும் வேதனையுடன் வாழ்ந்து வந்தேன். 19.08.2011 அன்று சிமளியா கிராம சபையில் நடைபெற்ற சுகமளிக்கும் ஆராதனையில் கலந்து கொண்டேன். ஆராதனையில் போதகர் ரன்சிங் பாபோர் அவர்கள் தேவ செய்தியளித்து வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்தார்கள். அந்த ஜெப நேரத்தில் 30 ஆண்டுகளாக கஷ்டப்பட்டு வந்த எனக்கு தேவன் அற்புதமான சுகத்தைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

பெயர் : **சபூர் S. டாமோர் (வயது : 35)**
ஊர் : நானா தாமணி, மத்தியப்பிரதேசம்



எனது குடும்பத்தில் மொத்தம் 7 பேர் மன நோயால் பாதிக்கப்பட்டிருந்தார்கள். அதில் நானும் ஒருவன். இந்த சூழ்நிலையில் பாடல்வா கிராமத்தில் நடைபெறும் கூட்டத்தினைக் குறித்துக் கேள்விப்பட்டு எங்களது குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் சென்று விடுதலை பெற்றார்கள். ஆனால் நான் மனநோயினால் மிகவும் பாதிக்கப்பட்டு செயல் இழந்தவனாகக் காணப்பட்டேன். இந்நிலையில் குஜராத்தில் 1.08.2011 அன்று நடைபெற்ற ஸ்தோத்திர கூட்டத்திற்கு என்னை அழைத்துச் சென்றார்கள். அங்கு சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் எனக்காக மிகுந்த பாரத்துடன் ஜெபித்தார்கள். ஜெபத்தினைக் கேட்டு அன்றைய தினமே தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார். எனது குடும்பத்தில் ஏழு பேருக்கும் விடுதலை தந்த தேவனைத் துதிக்கிறேன்.

## M.B.A., பட்டம் பெற்ற சகோ. D. கிளாட்சன் டைட்டஸ் அவர்கள்





## இணையதளம் வழியாய் காணிக்கை செலுத்தும் வசதி




அன்பான ஆதரவாளர்களே! நமது இணையதளம் மூலமாக ஷாலோம் ஊழியங்களுக்கு காணிக்கை செலுத்தும் வசதி செய்யப்பட்டுள்ளது. நமது இணையதளமான **www.shalommission.in** –ல் உங்களது வங்கி கணக்கின் மூலமாகவோ (Net Banking), அல்லது உங்களது பற்று அட்டை மூலமாகவோ (Debit Card) கடன் அட்டை மூலமாகவோ (Credit Card) தங்களது காணிக்கைகளை செலுத்தும் வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் நமது ஷாலோம் வங்கிக் கணக்கிற்கு தங்களது காணிக்கை மிகவும் பாதுகாப்பாக வந்துவிடும்.

நீங்கள் உங்களது கணிணியில் இருந்தவாரே காணிக்கையை பாதுகாப்பாகவும், வேகமாகவும் ஊழியங்களுக்காக பரிமாற்றம் செய்யும்படி இந்த வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.




இதற்காக தாங்கள் தங்களது வங்கியில் தங்களுடைய கணக்கிற்கு இன்டர்நெட் பேங்கிங் என்ற சேவையை அமலாக்கம் செய்து செயல்படுத்த வேண்டும். ஆதரவாளர்கள் இந்த சேவையை பயன்படுத்தி தேவ ஆசீர்வாதம் பெறும்படியாக வேண்டுகிறோம்.

# வேதம் வழங்குவோம் வாருங்கள்




***பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு***

நம் ஷாலோம் மிஷனெரி இயக்கத்தின் மூலமாக தேவன் பீல் ஆதிவாசி மக்களை இரட்சித்து அனுதினமும் சபையில் சேர்த்து வருகிறார். இவர்கள் தங்களின் பாவ வாழ்க்கையை விட்டு மனம் திரும்பி தேவனுக்காக வைராக்கியமாக வாழ்ந்து வருகிறார்கள். இப்போது இந்த மக்கள் எழுதவும் படிக்கவும் செய்கிறார்கள். இந்த மக்களின் ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சிக்காக குஜராத்தி, ஹிந்தி வேதாகமங்கள் வாங்கிக் கொடுக்கவேண்டியது நமது கடமையாகும்.

கடந்த 2010 ம் ஆண்டில் இந்திய வேதாகமச் சங்கம் குஜராத், அகமதாபாத் கிளை மூலமாக சுமார் 7 ஆயிரம் வேதப்புத்தகங்கள் வாங்கி நமது பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்குக் கொடுக்க தேவன் கிருபை செய்துள்ளார். குஜராத் மாநிலத்தில் அதிக வேதப்புத்தகங்கள் விநியோகம் செய்தமைக்காக ஷாலோம் ஊழியத்திற்கு இந்திய வேதாகமச் சங்கம் **“சிறப்பு விருது”** கொடுத்து கௌரவப்படுத்தியுள்ளது. அதற்காக தேவனைத் துதிக்கிறோம். உங்களில் பலர் கடந்த ஆண்டில் பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு வேதாகமம் வாங்கிக் கொடுக்கும்படியாக உதாரத்துவமான காணிக்கை அளித்துள்ளீர்கள். இதற்காக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். தேவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

2011ஆம் ஆண்டு முடிவதற்குள்ளாக 10000 (ஹிந்தி & குஜராத்தி) வேதாகமங்கள் தேவைப்படுகின்றன. ரூ. 80 வீதம் 10000 வேதாகமங்களுக்கு நிதி உதவித் தேவைப்படுகிறது. இதில் சுமார் 1600 வேதாகமங்களுக்கு நிதி உதவி கிடைத்துள்ளது. மீதி 8400 வேதாகமங்களுக்கு நிதி உதவி ரூ. 6,72,000/– கிடைக்கும்படியாக பாரத்துடன் ஜெபியுங்கள். மேலும் கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவுவாராகில், உங்களால் முடிந்த வேதாகமங்களை வாங்கிக் கொடுக்கலாம். உங்கள் நண்பர்களையும், உறவினர்களையும் வாங்கிக் கொடுக்கச் சொல்லலாம். அதற்கான காணிக்கையை **SHARING LOVE MISSION** என்ற பெயரில் **D.D., M.O.** அல்லது **Cheque** மூலமாகவோ தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி இந்த தேவ திட்டத்தை நிறைவேற்றலாம். கர்த்தர்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

## M.B.A., பட்டம் பெற்ற சகோ. D. கிளாட்சன் டைட்டஸ் அவர்கள்...

நமது பிஷப் V. தேவதாஸ் அவர்களின் மூத்த மகன் **சகோ. D. கிளாட்சன் டைட்டஸ்** அவர்கள் தனது M.B.A., பட்டப்படிப்பை காருண்யா பல்கலைக் கழகத்தில் முடித்து, 20.08.2011 அன்று **Dr. பால் தினகரன்** அவர்களிடமிருந்து தனது பட்டத்தைப் பெற்றமைக்காக தேவனைத் துதித்து **சகோ. D. கிளாட்சன் டைட்டஸ்** அவர்களை வாழ்த்துகிறோம். கர்த்தர் அவரை பீல் மக்கள் மத்தியில் வல்லமையாக பயன்படுத்தவும், அவருடைய எதிர்காலத்திற்காகவும் ஜெபிக்கவும் அன்பாகக் கேட்கிறோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

# கிறிஸ்மஸ் நாட்களில் பீல் மக்களை நினைப்போம்

நமக்காய் பூமியிலே பாலகனாய் பிறந்து, அற்புதங்களையும் அதிசயங்களையும் இந்த பூமியிலே செய்து, பாடுபட்டு, சிலுவையிலே மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பிறந்த நளை நாம் கொண்டாடுவதே கிறிஸ்மஸ் தினமாகும். இந்த கிறிஸ்மஸ் தினத்தைக் கொண்டாடும் நமது கடமை இயேசு கிறிஸ்துவின் முன் மாதிரியை நாம் பின்பற்றுவதே ஆகும். அவர் வாழ்ந்தபோது நன்மை செய்கிறவராய் இருந்தார். நாமும் அவரைப் போலவே வாழக் கற்றுக் கொள்வோமாக.

வருடந்தோறும் கிறிஸ்மஸ் காலங்களில் நம்முடைய சுதேச ஊழியர்களுக்கும் அவர்கள் மனைவிமார்களுக்கும், அவர்கள் பிள்ளைகளுக்கும் புத்தாடைகள் கொடுத்து, அவர்களும் கிறிஸ்மஸ்-ஐ மகிழ்ச்சியாய் கொண்டாட உதவி செய்ய தேவன் நமக்குத் தந்த கிருபைக்காக அவரைத் துதிப்போம். அதே போல் நம்முடைய பள்ளி மற்றும் விடுதியில் படித்துவரும் நம் ஆதிவாசி மாணவ, மாணவிகளுக்கும், சிறு பிள்ளைகளுக்கும் புத்தாடைகள் மற்றும் வெகுமதிகளை கிறிஸ்துமஸ் தினங்களில் கொடுத்து வருகிறோம்.

அதே போல் இந்த ஆண்டும் இந்த காரியங்களுக்காக சுமார் ரூ. 8 லட்சங்கள் வரை தேவையுள்ளது. ஆகவே கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவினால் ஒரு ஊழியரின் குடும்பத்திற்கு குறைந்தது ரூ. 1000/- அல்லது அதற்கு மேலாகவோ, ஒரு ஆதிவாசி பிள்ளைக்கு குறைந்தது ரூ. 500/- அல்லது அதற்கு மேலாகவோ, கிறிஸ்மஸ் வெகுமதியாகக் கொடுத்து உதவ அன்பாய் அழைக்கிறோம்.

இந்த வெகுமதி காணிக்கைகளை நவம்பர் மாதத்திற்குள்ளேயே அனுப்பினால் சுதேச ஊழியர்கள் குடும்பத்திற்கும், ஆதிவாசி பிள்ளைகளுக்கும் அன்பளிப்புகளை கிறிஸ்மஸ்க்கு முன்பாக கொடுக்க உதவியாக இருக்கும்.

நீங்கள் கொடுக்க விரும்பும் காணிக்கைகளை நேரடியாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கலாம். அல்லது எங்கள் ஷாலோம் பிரதிநிதிகளிடம் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளலாம்.

இந்த பீல் மக்களின் சந்தோஷத்தோடு கிறிஸ்மஸ்-ஐ வரவேற்போம்! தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வோம்!!





# காணிக்கை அனுப்பும் வழிகள்

- ⇨ தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
- ⇨ M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- ⇨ D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை Sharing Love Mission என்ற பெயருக்கு அனுப்பலாம்.
- ⇨ இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம்.
- ⇨ வெளிநாட்டில் வசிப்பவர்கள் Bank Of Baroda வங்கி மூலம் காணிக்கை அனுப்பலாம். FCRA A/c. No.07080100002672 - Sharing Love Mission. IFSC Code : BARB0TUTICO

---

**நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால்**
**அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.**

வங்கி கணக்கு பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

---

Tamilnad Mercantile Bank
A/c. No. : 106100710400009
I F S C Code : TMBL0000106

---

Axis (U.T.I) Bank
A/c. No. : 105010100094373
(IFS Code : UTIB0000105)

---

I.C.I.C.I Bank
A/C. No. 613901112799
(IFS Code : ICIC0006139)

---

ஆதரவாளர்கள் எங்களது வங்கிக் கணக்கில் காணிக்கை செலுத்தும் போது, உங்களது பெயரை கண்டிப்பாக கம்யூட்டரில் பதிவு செய்யும்படி ஒவ்வொரு முறையும் வங்கி அலுவலகரிடம் கூறி அதை உறுதி செய்து கொள்ளவும், இல்லையெனில் நீங்கள் செலுத்தும் காணிக்கை யார் செலுத்தியது என்ற விபரம் எங்களுக்கும் தெரியாமல் போக வாய்ப்புள்ளது.

# சாட்சி பகுதி....



நமது ஷாலோம் பங்காளர் **சகோதரி பேபி சந்திரா** (தூத்துக்குடி) அவர்கள் கர்த்தருக்கென்று கொடுப்பதன் மூலம் தாம் பெற்ற ஆசீர்வாதங்களைப் பகிர்ந்து கொள்கிறார்கள்.

கடந்த 2004–ம் ஆண்டு A.S.K.R. திருமண மண்டபத்தில் ஷாலோம் மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை நடந்து கொண்டிருந்தது. அதைப் பற்றி நான் ஒன்றும் அறியாமல் கடைக்குச் செல்வதற்காக வீட்டை விட்டு வெளியே வந்தபோது வால்போஸ்டர் எனது கண்ணில் படவே, தேவன் என்னை அங்கு செல்லும்படி ஏவினார். ஆகவே நான் கடைக்குச் செல்லாமல் நேராக ஷாலோம் மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனைக்குச் சென்றேன். அங்கு ஷாலோம் ஊழியங்களைக் குறித்து அறிந்து கொண்டேன், மேலும் தேவன் என்னை மிஷனெரியைத் தாங்கும்படியாக ஏவினார்.

இதை உறுதி செய்யும்படியாக நீ கடைக்குச் செல்வதற்குள்ளாக உனது மகன் அங்கு இருப்பான். இதுவே அடையாளம் என்று தேவன் கூறினார். கூட்டம் முடிந்தபின் நான் கடைக்குச் சென்றபோது எனது மகன் அங்கு இருந்தான். என்ன ஆச்சரியம் அவன் பயிற்சிக்காக வெளியூர் சென்றிருந்தான். அவன் வரக்கூடிய நாள் அது அல்ல. ஆகவே பொருத்தனையுடன் ஷாலோம் சுதேச ஊழியர் **சகோ. ராகேஷ் பாரியா** (லுனாவாடா, இராஜஸ்தான்) அவர்களை ஜெபித்துத் தாங்க தேவன் கிருபை செய்தார். ஒரு சில மாதங்களுக்குள்ளாக பண நெருக்கடியினால் பாதிக்கப்பட்டோம். நாங்கள் வாங்கியிருந்த டாரஸ் வண்டியினால் மிகவும் நஷ்டமடைந்தோம். அதன்பின் ஊழியத்தைத் தாங்க முடியாமல் போனது.

இந்த சூழ்நிலையில் வங்கியில் அடமானம் வைக்கப்பட்டிருந்த எனது நகைகள் அனைத்தையும் புதன் கிழமை அன்று ஏலம் விடப்போகிறோம் என்று வங்கியிலிருந்து நோட்டீஸ் வந்தது. ஆனால் நான் பீகாரில் இருந்தேன் என்ன செய்வதென்று தெரியாத சூழ்நிலையில் தேவனை நோக்கிப் பார்த்து, ஊழியத்தை ஒழுங்காக தாங்குவேன் என தீர்மானம் செய்தேன். எனது தீர்மானத்தை தேவன் கனப்படுத்தினார். எனக்கு ஒருவரிடமிருந்து வரவேண்டிய ரூ. 25,000/– ஐ அவர் நகை ஏலம் விடப்படுவதற்கு முந்தின நாள் தந்தார். அதை வைத்து எனது நகைகளை மீட்க தேவன் கிருபை தந்தார்.

அதன்பின் தேவனுடைய ஊழியத்தை தொடர்ந்து வைராக்கியத்துடன் தாங்க தேவன் கிருபை செய்து வருகிறார். அதன்பின் தூத்துக்குடிக்கு வந்தேன். எங்களுக்கு வருகின்ற கடை மற்றும் வீட்டு வாடகைகளை உயர்த்தி தேவன் ஆசீர்வதித்தார். மேலும் எனது கண் பார்வையில் பிரச்சனை இருந்து வந்தது. மருத்துவர்களிடம் பரிசோதித்தபோது ஆப்ரேஷன் செய்ய வேண்டும் என்று கூறிவிட்டார்கள். ஆனால் எனது உடலில் சுகர் அதிக அளவில் இருந்தது.

இந்த சூழ்நிலையில் கடந்த ஜனவரி 31ம் தேதி தூத்துக்குடி ரூபவதி பேலஸில் வைத்து நடைபெற்ற ஷாலோம் மிஷனெரி தரிசனக் கூடுகையில் பங்கெடுத்தேன். அது மிகவும்

ஆசீர்வாதமாக அமைந்தது. அதன்பின் எனது உடலில் உள்ள சுகர் குறைந்தது. ஆபரேஷன் நல்லபடியாக முடிய தேவன் கிருபை செய்தார். ஆபரேஷனுக்கு ஒரு பைசா கூட நான் செலவு செய்யவில்லை. ஊழியத்திற்கு ஒழுங்காக கொடுக்க ஆரம்பித்தபின் தேவன் என்னையும் எனது குடும்பத்தையும் அபரிமிதமாக ஆசீர்வதித்து வழி நடத்தி வருகிறார். ஊழியங்களுக்காக ஜெபிக்கும், கொடுக்கும் தேவ பிள்ளைகளை ஒருபோதும் தேவன் கைவிடாமல் வழி நடத்த வல்லமையுள்ளவராயிருக்கிறார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

## SHALOM CHARITY MISSION
## ஷாலோம் சேரிட்டி மிஷன்

தேவனுடைய பெரிதான கிருபையால் கடந்த 19 ஆண்டுகளாக தேவன் தந்த Sharing Love Mission (அன்பு பகிர்வு இயக்கம்) மூலமாக 1 கோடி பீல் ஆதிவாசி மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கவும், சீஷர்களாக்கவும், ஊழியர்களை எழுப்பவும், சபைகளைக் கட்டவும் தேவன் கிருபை தந்து, ஆயிரம் ஆயிரமாக ஆசீர்வதித்து வருகிறார்.

அதே வேளையில் நம் விசுவாசக் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கல்வி வசதிக்காக பள்ளிக்கூடங்கள், விடுதிகள் கட்டப்படவும் மற்றும் சுகாதார மருத்துவத் திட்டங்களும், பயிற்சி முகாம்களும் நடத்தப்படவும் வேண்டும். மேலும் குடிநீர் வசதி செய்து கொடுத்தல், சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள், பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள் போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். நமக்கு வரும் நிதி உதவியில் மூன்றில் ஒரு பங்கு மேற்கண்ட திட்டங்களுக்காகவே செலவிடப்படுகின்றது. இன்னும் வரும் காலங்களில் மிக அதிக அளவில் இவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். குறிப்பாக சுமார் 10 ஆயிரம் பீல் ஆதிவாசி மாணவர்களுக்கு **“கல்வி அறிவு வளர்ச்சி”** திட்டங்களை செயல்படுத்த வேண்டும்.

இதற்காக **Shalom Charity Mission** – என்ற இயக்கம் பதிவு செய்யப்பட்டு சமுதாய முன்னேற்றப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது. **Sharing Love Mission** சுவிசேஷப் பணி மற்றும் சபை காரியங்களை மட்டும் கவனித்து செயல்படும். **Shalom Charity Mission** – மற்ற சமுதாய முன்னேற்ற பணிகளையும், குழந்தைகளின் கல்விப் பணிகளையும் கருத்தாகத் திட்டமிட்டு, நிதிகளை சேகரித்து திறம்பட செயல்படும். Hostel பணி, Education பணி, Literature Fund மற்றும் இதர சமூக சேவை பணிகளுக்கு நிதி உதவி செய்யும்போது **Shalom Charity Mission** – என்ற பெயருக்கு அனுப்ப மிக அன்பாய் கேட்கிறோம்.

***மேலும் குழந்தை ஆதரவுத் தொகை*** அனுப்புவோர் **Shalom Charity Mission** – என்ற பெயருக்கே **D.D. or Cheque or M.O.** மூலமாகவோ அனுப்ப மிக அன்பாய் கேட்கிறோம்.

| | | |
|---|---|---|
| வங்கி கணக்கு | : | **SHALOM CHARITY MISSION** |
| **Axis** வங்கி கணக்கு எண் | : | **105010100096779 - Tuticorin Branch** |
| **TMB** வங்கி கணக்கு எண் | : | **174100710400061 - Tuticorin Branch** |

# தன்னார்வமாய் செயல்பட அழைப்பு....
## (பிரதிநிதிகள்)

தேவனுடைய பெரிதான கிருபையினால் நமது ஷாலோம் ஊழியங்களின் மூலமாக திரளான ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டு வருகிறார்கள். குறிப்பாக தேவனால் முன் குறிக்கப்பட்ட 48 சுதேச ஊழியர் குடும்பங்கள் மூலமாக தேவன் பல அற்புதங்களைச் செய்து ஒவ்வொரு நாளும் புதிதாக ஆத்துமாக்களை சபையில் சேர்த்து வருகிறார்.

அதே நேரத்தில் இவர்களை ஆவிக்குரிய பாதையில் நடத்த பல பயிற்சிகள், கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும். ஊழியர்களைத் தாங்க வேண்டும், ஆலயங்கள் கட்டப்பட வேண்டும், அவர்கள் குழந்தைகள் படிக்க வைத்து பராமரிக்கப்பட வேண்டும். இது போன்ற காரியங்களை நாம் நிறைவேற்ற நமக்கு அநேக தேவைகள் உண்டு. இவற்றை சந்திக்க புதிய ஆதரவாளர்கள் மற்றும் ஆதரவாளர்களிடமிருந்து காணிக்கைகளை சேகரித்து எங்களுக்கு அனுப்பும் பிரதிநிதிகளும் தேவை.

உங்களில் அநேகர் ஆண்டவருடைய ஊழியத்தைச் செய்ய வாஞ்சை இருந்தும், தங்களுடைய சூழ்நிலைகளின் காரணமாக செய்யமுடியாமல் இருக்கலாம். ஆகவே நீங்கள் தேவனுடைய இந்த உன்னதமான பணியை உங்கள் பகுதியிலேயே பகுதி நேரமாக நிறைவேற்றலாம்.

இதுவரை நமது ஷாலோம் ஊழியங்களுக்கு 15 முழு நேர முன்னேற்றப் பணியாளர்களும், 55 பிரதிநிகளும் தமிழகத்தில் வெவ்வேறு இடங்களில் செயலாற்றி வருகிறார்கள். தேவன் தாமே அவர்களையும் அவர்கள் குடும்பத்தையும் ஆசீர்வதித்து இம்மட்டுமாய் வழி நடத்தி வருகிறார். இன்னும் அநேக ஊர்களிலும் மாவட்டங்களிலும் பிரதிநிதிகள் தேவைப்படுகிறார்கள்.

**குறிப்பாக கீழ்க்கண்ட ஊர்களில் உடனடியாக பிரதிநிதிகள் தேவைப்படுகிறார்கள்.**

**தமிழ்நாடு :–**

| | | | |
|---|---|---|---|
| நாசரேத் | ஆறுமுகநேரி | கோவில்பட்டி | நாகர்கோவில் |
| சிவகாசி | மதுரை | தேனி | திண்டுக்கல் |
| ராமநாதபுரம் | சிவகங்கை | திருச்சி | கிருஷ்ணகிரி |
| வேலூர் | பாண்டிச்சேரி | | |
| **இந்தியா :–** | பெங்களூர் | மும்பை | டெல்லி |
| **வெளிநாடு :–** | சிங்கப்பூர் | அமெரிக்கா | |

மேற்கண்ட இடங்களில் மட்டுமல்ல மற்ற இடங்களிலும் வாஞ்சையுள்ள தன்னார்வத் தொண்டர்கள் இந்த உன்னதப் பணிக்கு அழைக்கப்படுகிறீர்கள். வாஞ்சையுள்ளவர்கள் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள். தேவன்தாமே உங்கள் வாஞ்சையையும், கையின் பிரயாசங்களையும் ஆசீர்வதிப்பாராக.

தொடர்புக்கு : செல் : 09345675468 (சகோ. சாம் குணசீலன்)

# ஷாலோம் பிரதிநிதிகள்

*கிறிஸ்துவில் பிரியமானவர்களே,*

குஜராத், இராஜஸ்தான் மத்தியப்பிரதேசம் மாநிலங்களில் பீல் மக்கள் மத்தியில் நடைபெற்றுவரும் நமது ஷாலோம் ஊழியங்களுக்காக அநேக மாவட்டங்களில் பிரதிநிதிகள் தன்னார்வத்துடன் செயல்பட்டு வருகிறார்கள். ஷாலோம் ஊழியங்களுக்கு காணிக்கைக் கொடுக்க முன்வரும் ஆதரவாளர்கள் அந்தந்த பகுதிகளில் செயல்பட்டு வரும் நம் ஷாலோம் ஊழியர்கள் மற்றும் ஷாலோம் பிரதிநிதிகளை தொடர்புகொள்ள அன்பாய் கேட்கிறோம்.

| S.I. No. | Rep. Code | Name | Dist. | Phone No. |
|---|---|---|---|---|
| 1 | Rep029 | Mr. Ebenezer Daniel.B(Staff) | Chennai | 9344475468 |
| 2 | Rep053 | Mr. Pauldurai.S | Chennai | 9444899908 |
| 3 | Rep006 | Mr. Samuel.M | Chennai | 044-22440989 |
| 4 | Rep020 | Mr. Immanuel Sekar.R | Chennai | 8015136647 |
| 5 | Rep078 | Mrs. Queenie Charles | Chennai | 9952914364 |
| 6 | Rep039 | Mrs. Manoranjitham Wilfred | Chennai | 9884210600 |
| 7 | Rep004 | Mr. John Victor.C | Coimbatore | 9843313760 |
| 8 | Rep013 | Pr. Anantharaz (APH) | Coimbatore | 9843074137 |
| 9 | Rep021 | Mr. Kingston.S.V | Coimbatore | 9442539044 |
| 10 | Rep018 | Mr. Jebasingh Santhosam.R | Erode | 9488560799 |
| 11 | Rep008 | Mr. Daniel Jayaraj | Hyderabad | 9849354493 |
| 12 | Rep037 | Mr. Selvadurai.G(Staff) | K.K.Dist. | 9487689869 |
| 13 | Rep003 | Mr. George.P | K.K.Dist. | 9443993423 |
| 14 | Rep024 | Mr. Kingbert.L | K.K.Dist. | 9486864820 |
| 15 | Rep011 | Doctors Taftee Fellowship | K.K.Dist. | 04652-233437 |
| 16 | Rep068 | Mr. David Bright Singh.P | K.K.Dist. | 9442655321 |
| 17 | Rep064 | Mr. Charles.P | K.K.Dist. | 04651-273112 |
| 18 | Rep071 | Mr. John Victor.A | K.K.Dist. | 04651-261116 |
| 19 | Rep079 | Mr. Johnson.N | K.K.Dist. | 9486797772 |
| 20 | Rep065 | Mr. Jabarson.S.M | K.K.Dist. | 9443593153 |
| 21 | Rep067 | Mrs. Geetha Gopi | K.K.Dist. | 04651-277265 |
| 22 | Rep069 | Mrs. Vasantha Kumarai.T.C | K.K.Dist. | 04651-260805 |
| 23 | Rep061 | Mr. Jerry David.P | K.K.Dist. | 9791781354 |
| 24 | Rep063 | Mr. Christopher.P | K.K.Dist. | 9787958155 |
| 25 | Rep014 | Mrs. Vasantha Selvaraj.G | K.K.Dist. | 04652-286444 |
| 26 | Rep070 | Mrs. Rose Mary.M | K.K.Dist. | 9488336467 |
| 27 | Rep066 | Mr. Kislet.A | K.K.Dist. | 04651-28680 |
| 28 | Rep052 | Mr. Libin Thampi.P | K.K.Dist. | 9047545031 |
| 29 | Rep009 | Mrs. Ruby Prabhavathi.M | Madurai | 9940753581 |
| 30 | Rep077 | Mr. Manohar.S.P.M & Fly | Tirunelveli | 9843312733 |

| | | | | |
|---|---|---|---|---|
| 31 | Rep073 | Mr. Pitchai Jebaraj.G | Tirunelveli | 9842168482 |
| 32 | Rep033 | Mr. Jeyapaul.M | Tirunelveli | 04634-223011 |
| 33 | Rep084 | Mr. Johnson Selvakumar.D | Tirunelveli | 9781833699 |
| 34 | Rep028 | Mr. Johnson Jebaraj.J(Staff) | Tuticorin | 9362617374 |
| 35 | Rep023 | Mr. Sam Gunaseelan.S(Staff) | Tuticorin | 9345675468 |
| 36 | Rep002 | Mr. Allen Elvis.S (Staff) | Tuticorin | 9344727978 |
| 37 | Rep076 | Mr. Judes Rathish kumar.J(Staff) | Tuticorin | 9600695598 |
| 38 | Rep080 | Mr. David.R(Staff) | Tuticorin | 9025587440 |
| 39 | Rep005 | Mr. Jeyabal.I.A(Staff) | Tuticorin | 9789718935 |
| 40 | Rep057 | Mr. Jeyaprakash.S.P(Staff) | Tuticorin | 9994077782 |
| 41 | Rep015 | Mr. Ebenezer David(Staff) | Tuticorin | 8754901554 |
| 42 | Rep088 | Ms. Elizabeth (Staff) | Tuticorin | 9597154709 |
| 43 | Rep050 | Mrs. Chandra.J (Staff) | Tuticorin | 9976626661 |
| 44 | Rep049 | Ms.Karunya.K (Staff) | Tuticorin | 8870329311 |
| 45 | Rep042 | Mrs. Esther Jeba Mathu (Staff) | Tuticorin | 7708941251 |
| 46 | Rep089 | Mrs. Geetha.J (Staff) | Tuticorin | 9791391853 |
| 47 | Rep059 | Mr. Arputharaj Margoschis.J | Tuticorin | 9486222012 |
| 48 | Rep062 | Mr. Baskar.C | Tuticorin | 9994170465 |
| 49 | Rep030 | Mr. Sekaran.S.A | Tuticorin | 9944210217 |
| 50 | Rep016 | Mrs. Shanthi Livingston | Tuticorin | 9787648246 |
| 51 | Rep048 | Mr. Selvaraj.S | Tuticorin | 7598566171 |
| 52 | Rep083 | Mr. Valentine John | Tuticorin | 9940008442 |
| 53 | Rep058 | Mrs. Pattu Rose Sargunam | Tuticorin | 9487324068 |
| 54 | Rep082 | Ms. Esther Jeya | Tuticorin | 8870820821 |
| 55 | Rep026 | Mr. Gunasingh.D | Tuticorin | 9442949151 |
| 56 | Rep036 | Mr. Rajan.Y | Tuticorin | 9443167129 |
| 57 | Rep031 | Mrs. Selva Seeli.G | Tuticorin | 9842193224 |
| 58 | Rep047 | Mr. Muthu.M | Tuticorin | 9894685538 |
| 59 | Rep046 | Mr. Balasingh | Tuticorin | 0461-2311012 |
| 60 | Rep035 | Mr. Thomas.I | Tuticorin | 9842509223 |
| 61 | Rep087 | Mrs. Anusia.J | Tuticorin | 9788854965 |
| 62 | Rep045 | Mr. Godwin.V | Tuticorin | 0461-2346251 |
| 63 | Rep007 | Mrs. Rajakani.S | Tuticorin | 9842217738 |
| 64 | Rep027 | Mrs.Nirmala Felixson | Tuticorin | 0461-2310766 |
| 65 | Rep012 | Mrs. Juliet Koilpillai | Tuticorin | 9894723162 |
| 66 | Rep041 | Mrs. Fathima Mary.T | Tuticorin | 7708072120 |
| 67 | Rep093 | Mrs. Jesu Marial.P | Tuticorin | 9486984296 |
| 68 | Rep094 | Mr. Ruban. | Tuticorin | 9894188978 |
| 69 | Rep092 | Mr. Paulraj.Y | Tuticorin | 8015807361 |
| 70 | Rep010 | Mrs. Juliet Immanuel | Rajapalayam | 9364114373 |



# ஷாலோம் ஊழியங்களை அறிமுகப்படுத்துங்கள்...

***கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே!***

வேதாகமத்தில் அறிமுகப்படுத்துவதின் மூலமாக தேவன் பல அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்வதை நான் காண்கிறோம்.

a) 2 ராஜா. 5:3–ல் நாம் பார்க்கும்போது குஷ்டரோகத்தினால் பாதிக்கப்பட்ட நாகமானுக்கு அதிலிருந்து சுகம் கிடைக்க வழி தெரியாமல் இருந்தது. அந்த நேரத்தில் ஒரு சிறு பெண் இஸ்ரவேலில் ஒரு தீர்க்கதரிசி இருக்கிறார் என எலிசாவை அறிமுகப்படுத்துகிறாள். **அறிமுகப்படுத்தப்பட்ட எலிசாவின்** மூலமாக நாகமானின் குஷ்டரோகம் நீங்கியது.

b) யோவான் 1 :41 –ல் அந்திரேயா முதலாவது தன் சகோதரனாகிய சீமோனைக் கண்டு மேசியாவைக் கண்டோம் என்று கூறி, சீமோனை இயேசுவினிடத்தில் கூட்டிக் கொண்டு வந்து அறிமுகம் செய்து வைக்கிறார். அந்த நேரத்திலிருந்து பேதுரு இயேசுவின் சீஷனாக மாறி பின்பு இயேசுவுக்காக பல ஆயிரம் ஜனங்களை இரட்சிப்பிற்கு நேராக நடத்தினார். அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் அந்திரேயாவால் **அறிமுகப்படுத்தப்பட்ட பேதுரு** மூலமாக தேவன் பெரிய காரியங்களைச் செய்தார்.

c) இயேசு ஜனங்களுக்குப் போதகம் பண்ணினபின்பு மனதுருகி, இந்த ஜனங்களுக்காகப் பரிதபிக்கிறேன். இவர்களுக்கு போஜனம் கொடுங்கள் என்று கூறுகிறார். அந்த வேளையில் யோவான் 6:9– ல் சீஷன் ஒரு சிறுவனை இயேசுவினிடத்தில் **இங்கு ஒரு பையன் இருக்கிறான்** என்று அறிமுகப்படுத்தி இவனிடத்தில் ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் உள்ளன என்று கூறினார். அந்த சீஷனால் **அறிமுகப்படுத்தப்பட்ட சிறுவன்** மூலமாக ஐந்தாயிரத்திற்கும் அதிகமான ஜனங்கள் போஷிக்கப்பட்டார்கள்.

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! ஒரு கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி மக்கள் இன்றைக்கும் நாகமானைப் போல வியாதியிலும், இயேசுவைக் குறித்துக் கேள்விப்படாமலும், ஆத்தும பசியினால் வாடி தவித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு இயேசுவைக் குறித்து நீங்கள் நேரடியாக அறிவிக்க முடியாவிட்டாலும், தேவனால் அழைக்கப்பட்ட நம் ஷாலோம் ஊழியங்களை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்தலாம். **நீங்கள் அறிமுகப்படுத்துகிற நபர்** மூலமாக ஊழியங்கள் இன்னும் விரிவடையும். பீல் மக்கள் அநேகர் இரட்சிக்கப்படுவார்கள். அதன் நிமித்தமாக பரலோகம் களிகூறும். இதற்குக் காரணமாக இருந்த உங்களை தேவன் இம்மையிலும் மறுமையிலும் ஆசீர்வதித்து மகிமைப்படுத்துவார்.

ஆம் பிரியமானவர்களே! பீல் மக்கள் மத்தியில் அவர்கள் இரட்சிப்பின் பணியில் செயல்பட்டு வரும் நமது ஷாலோம் ஊழியங்களை, உங்களது சபையிலோ, நண்பர்களிடமோ அல்லது உங்களது உறவினர்களிடமோ, Pamphlet, Magazine, VCD கொடுத்து அறிமுகப்படுத்துங்கள். மேலும் நமது ஷாலோம் இணையதளமான www.shalommission.in –ஐ பார்க்கச் சொல்லலாம்.

தொடர்புக்கு : செல் : 09345675468 (சகோ. சாம் குணசீலன்)



## பணித்தள அலுவலகத்திற்கு கம்ப்யூட்டர் மற்றும் பிரிண்டர் தேவை

நமது பணித்தளத்தில் ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலமாக சமுதாய முன்னேற்றப் பணி மற்றும் சிறுவர் கல்வி மற்றும் பராமரிப்புப் பணி சிறப்பாக நடைபெற்று வருகிறது. பணித்தளத்தில் **சகோ. டேனியல் ஆஸ்வால்ட்** அவர்கள் நமது குஜராத் பணித்தள அலுவலகத்தில் இதற்காக பணி செய்துவருகிறார்கள்.



அவர்கள் அங்குள்ள சிறுவர்களைப் பற்றிய தகவல்களை சேகரித்து, ஊழிய குழந்தை ஆதரவாளர்களுக்கு அனுப்பும் பணிக்காக **ரூ. 80,000/– மதிப்பில்** ஒரு கம்ப்யூட்டர் மற்றும் கலர் பிரிண்டர் தேவைப்படுகிறது. ஆவியானவர் உங்கள் உள்ளத்தில் ஏவுவாராகில் இந்த தேவையை நிறைவேற்ற முன் வாருங்கள். தேவன்தாமே உங்களை ஆசீர்வதித்து உயர்த்துவராக!

*"நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்"* – 2தீமோ. 4:7

## வெண்ணங்கி தரித்தோர் வரிசையில்.....



பெயர்

**Prof. R. ராஜா தம்பிதுரை**

பிறப்பு :05.031962, இறப்பு : 06.09.2011
வயது : 49

நாசரேத் பகுதியில், நமது ஷாலோம் ஊழியங்களின் பிரதிநிதியாக செயல்பட்டு வந்த அருமை சகோதரர் **ராஜா தம்பிதுரை** அவர்கள் **06.09.2011** அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள்.

சுமார் எட்டு ஆண்டுகளாக, ஷாலோம் ஊழியங்களின் நாசரேத் பகுதியின் பிரதிநிதியாக செயல்பட்டு, காணிக்கைகளை சேகரித்து அனுப்பியும், ஊழியங்களை ஜெபத்தால் தாங்கியும் வந்தார்கள். இவரைப் பிரிந்து வாடும் அவரது அன்பு மனைவி சகோதரி R. சாராள் ஞானபாய், அன்பு மகன் R. ஜேம்ஸ் ஆகியோருக்காக மறவாமல் ஜெபிக்க அன்பாகக் கேட்கிறோம்.



# ஜாண் ஹஸ்

(1371–1415)

***மிஷனெரி முன்னோடிகள்***

ஜாண் ஹஸ், "புராட்டஸ்டன்ட் இயக்கம்" தோன்றுவதற்கு ஒரு முக்கிய பங்கு வகித்தார். அவருடைய போதனைகள் ஐரோப்பிய நாடுகளை மட்டுமின்றி மார்ட்டின் லூத்தரையும் கவர்ந்தது. ஹஸ்ஸினுடைய பரந்த கருத்துக்கள் (Czech) எழுத்து வரலாற்றில் முக்கிய இடம் பிடித்தது. இன்றும் ஜாண் ஹஸ் நினைவுச் சின்னத்தை பிரேஹ் பழைய நகர சதுக்கத்தில் காண முடியும். அமெரிக்காவில் உள்ள சுவிசேஷ லுத்தரன் சபை தனது பரிசுத்தவான்களின் நாட்காட்டியில் ஹஸ் ஒரு இரத்தசாட்சி என்று பெயரிட்டு நினைவுபடுத்தியது.

இங்கிலாந்து அரசர் இரண்டாம் ரிச்சர்டின் மனைவி ஆனி, பொஹிமியாவைச் சேர்ந்தவர். 1394 ஆம் ஆண்டு ஆனி ரிச்சர்டு இறந்ததைத் தொடர்ந்து, அவளுடைய வேலைக்காரர்கள் தங்களுடைய சொந்த இடமாகிய பொஹிமியாவுக்கு வந்தனர். இங்கிலாந்தில் ஜாண் விக்ளிப்பின் போதனையால் ஈர்க்கப்பட்ட அவர்கள், அந்த போதனைகளை பொஹிமியாவுக்குக் கொண்டு வந்து போதித்தனர். ஜாண் விக்ளிப்பின் போதனைகளைக் கேட்ட ஜாண் ஹஸ், அவைகளால் ஈர்க்கப்பட்டு அவைகளை நடைமுறைப்படுத்தினார். இங்கிலாந்தில் விக்ளிப் சபை எழுப்புதலுக்காகப் பாடுபட்டது போல, ஜாண் ஹஸ்சும் பொஹிமியாவில் சபை எழுச்சிக்காக பாடுபட்டார்.

ஜாண் ஹல் 1371 ஆம் ஆண்டு பொஹிமியாவிலுள்ள ஹீஸிநெக் என்ற பட்டணத்தில் பிறந்தவர். லுத்தரைப் போல் ஜாண் ஹஸ்சும் விவசாய குடும்பத்தில் பிறந்தார். அவர் பிறந்த பட்டணத்தின் பெயரைக் குறிப்பிடும் வண்ணமாக அவருக்கு ஹல் என்கிற பெயர் கொடுக்கப்பட்டது. ஹஸ் என்றால் "வாத்து" என்று அர்த்தமாம். பிரேஹ் பல்கலைக்கழகத்தில் 1393 ஆம் ஆண்டு இளங்கலைப் பட்டம் பெற்றார். 1394 ஆம் ஆண்டு முதுகலைப் பட்டம் பெற்றார்.

ஹஸ் தனது 20வது வயதில் விக்ளிப்பின் இறையியல் வெளியீடுகளை விரும்பிப் படித்தார். அதன் மூலம் தரிசனத்தைப் பெற்றுக் கொண்ட ஹஸ், பொஹிமியாவில் உள்ள சபைகளில் சீர்திருத்தத்தைக் கொண்டு வரத் தீர்மானித்தார். 1402 ஆம் ஆண்டு பெத்லகேம் ஆலய குருவானவராக நியமிக்கப்பட்டார். அங்கு அவர் தனது கருத்துக்களை போதித்து சபையில் சீர்திருத்தம் கொண்டுவரத் தொடங்கினார். பெத்லகேம் சிற்றாலயக் கதவில் ஆறு தவறுகள் (Six Errors) என்ற ஒரு சிறு புத்தகம் ஒன்றை எழுதி தொங்கவிட்டார். மனிதர்களைச் சாராமல் தேவனையே நம்பி, அவருக்கே கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்று ஜனங்களுக்கு போதித்தார். 1405 ஆம் ஆண்டு போப் இன்னோசன்ட் VII ஹஸ்ஸினுடைய உபதேசங்களை தடை செய்ய உத்தரவிட்டார். ஆனால் ஹஸ் தொடர்ந்து தன் கருத்துக்களை உபதேசித்துக் கொண்டிருந்தார்.

தலைமை பிஷப் சிபினிக் ஹஸ்ஸின் வெளியீடுகளை எரிக்கும்படி கட்டளை கொடுத்தார். ஏறக்குறைய இருநூறு கையெழுத்துப் பிரதிகள், இறையியல் சாராத பாடங்களான தத்துவம் போன்றவைகள் கைப்பற்றப்பட்டு எரிக்கப்பட்டன.

1409 ஆம் ஆண்டு டிசம்பர் 20 ஆம் தேதி ஐந்தாம் அலெக்சாண்டர் பிறப்பித்த ஆணை விக்ளிப் கருத்துக்களுக்கு எதிரான நடவடிக்கையை எடுக்க முதன்மை பிஷப்புக்கு அதிகாரம் கொடுத்தது. விக்ளிப்பின் அனைத்து புத்தகங்களும் உபதேசங்களும் எரிக்கப்பட்டதுமல்லாமல், பிரசங்கிப்பதற்கும் தடை விதிக்கப்பட்டது. 1410 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்த ஆணைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஐந்தாம் அலெக்சாண்டருக்கு ஹஸ் முறையீடு செய்தார். அவரின் அந்த முயற்சி விருதாவாயிற்று. விக்ளிப்பின் புத்தகங்கள் எல்லாம் எரிக்கப்பட்டதுமல்லாமல், ஹஸ்சும் புறக்கணிக்கப்பட்டார்.

1413 ஆம் ஆண்டு ஜாண் ஹஸ் சபையைப் பற்றிய கரிசனை என்ற புத்தகத்தை எழுதினார். அதிலுள்ள கருத்துக்கள் அனைத்தும் விக்ளிப்பின் கருத்துக்களுக்கு ஒத்தவைகளாக இருந்தன. விக்ளிப்பைப் போல ஹஸ்சும் போப்பின் அதிகாரத்திற்கு முரணாக எழுதியிருந்தார். ஹஸ் தன்னுடைய கருத்துக்கள் அடங்கிய புத்தகத்தை பிரேஸல் உள்ள பெத்லகேம் சபையில் வாசிக்கப்படும்படி அனுப்பினார். அங்கு அவருடைய கருத்துக்கள் சபையினருக்கு முன்பாக வாசிக்கப்பட்டது. 1414 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ஆம் தேதி போப்பின் அதிகாரத்திற்கு முடிவு கட்டும் வண்ணம் சபையில் எழுச்சி உண்டாவதற்காக பொதுக்குழு ஒன்று கான்ஸ்டான்ஸில் உண்டாக்கப்பட்டது. ஹஸ்சும் அந்தக் குழுவிற்கு ஆதரவு தெரிவித்தார்.

சிறையில் இருக்கும்போது அவர் சபையைக் குறித்ததான "டி எக்ளிசியா" என்ற மிகவும் முக்கியமான கருத்துக்களை வெளியிட்டார். அதில் போப் மற்றும் கார்டினல்களில் அதிகாரத்திற்கு சவால் விட்டுள்ளனர். அவர்கள் சபை அல்ல என்று சொன்னார். அவர்கள் இல்லாமலேயே சபை தோன்றியது. சபையின் அஸ்திவாரம் கிறிஸ்துவே அன்றி பேதுரு அல்லவென்றார். போப் ஹஸ்ஸை அழைத்து தனது கருத்துக்களை கைவிட்டுவிட கூறினார். ஆனால் ஹஸ் மறுக்கவே, தொடர்ந்து சிறையிலடைக்கப்பட்டார். சிறையில் கடுமையான பெலவீனம், பசி போன்றவற்றால் கடும் அவதிக்குள்ளானார். 1415 ஆம் ஆண்டு ஜுலை 6ம் தேதி கதீட்ரலில் சபைத் தலைவர்கள் கூடி, ஜாண் ஹஸ் சட்டப்படி கொல்லப்பட வேண்டியவர் என்று தீர்ப்பு வழங்கினர். அதன்படி ஆறு பிஷப்கள் ஹஸ்ஸின் அங்கியை கழற்றிவிட்டு, அவருடைய தலையில் பிசாசு படம் உள்ள ஒரு தொப்பியை அணிவித்து அவமானப்படுத்தினர்.

இத்தாலிய மதகுரு, ஹஸ் மேலும் அவருடைய வெளியீடுகள் மேலும் வரக்கூடிய தண்டனையை உச்சரித்தார். அந்த நேரத்திலும் ஹஸ் முழங்கால்படியிட்டு மெதுவான குரலில் சத்துருக்களை மன்னிக்கும்படி வேண்டினார். ஹஸ் தான் இரத்தசாட்சியாக மரிக்கப்போகிற இடத்துக்கு ஆயுதமணிந்த மனிதர்களால் கொண்டு போகப்பட்டார். அந்த இடத்தில் அவர் முழங்கால்படியிட்டு, கரங்களை விரித்து, சத்தமாக ஜெபித்தார். தண்டனையை நிறைவேற்றுகிறவர்கள் அவருடைய உடைகளைக் கழற்றி, கைகளை கயிற்றால் பின்னால் வைத்துக்

கட்டினர். கழுத்தை சங்கிலியால் கட்டி, விறகுகளையும், வைக்கோலையும் கழுத்தை மூடும் வரை வைத்தனர். கடைசி தருணத்தில், படைத்தளபதி வான் பார்ப்பன் ஹஸ்ஸிடம் அவரது கொள்கை தவறு என்று ஒத்துக் கொண்டு உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும்படி கூறினார். ஆனால் ஹஸ்ஸோ எனக்கு விரோதமாய்க் கூறப்பட்டவைகளை நான் ஒருக்காலும் பிரசங்கித்ததில்லை என்பதற்கு தேவனே சாட்சி, நான் எழுதிய, பிரசங்கித்த, கற்பித்தவைகள் சுவிசேஷங்களில் சொல்லப்பட்ட உண்மைகளே, நான் மரிப்பதற்கும் ஆயத்தம்” என்றார்.

தேவ மனிதன் ஹஸ்–சை எரித்துக் கொல்ல அதிகாரம் பெற்ற மனிதன், விறகு கட்டைகளுக்கு தீ வைக்கும் முன், “இந்த வாத்தை சமைக்கப் போகிறோம்” என்றான். அதற்கு மாறாக ஹஸ் கூறினது : 100 வருடம் கழித்து கழுகு ஒன்று வரும். அதை யாராலும் தொட முடியாது என்று கூறினார். அது மார்ட்டின் லூத்தரைக் குறித்து தீர்க்கதரிசனமாக அமைந்தது. கடைசி நேரத்தில், தன் உடல் எரியப் போகும் நேரத்திலும், தீ எரிந்த நேரத்திலும் “கிறிஸ்துவே உன்னதமான தேவனுடைய குமாரனே, என்மேல் கிருபையாயிரும்” என்று சத்தமிட்டு மரித்தார்.

ஜாண் ஹஸ் போப்பையும், எழுதப்பட்ட விதியையும் விட மேலான அதிகாரம் வேதாகமத்திற்கு இருக்கிறது என்று நம்பினதினிமித்தம் அவருடைய கருத்துக்கள் தவறானவைகள் என்று தீர்க்கப்பட்டன. பாவத்திலிருந்து இரட்சிப்பு, கிருபையாலும், இயேசு கிறிஸ்து மேலுள்ள விசுவாசத்தாலும் மட்டுமே கிடைக்கிறது என்று நம்பினார். ஹஸ்ஸை தீ வைத்துக் கொன்ற குழு ஹஸ்ஸின் கொள்கைகள் அவரோடு தீயில் அழிந்து விட்டது என்று நினைத்திருக்கலாம். ஆனால் அந்தத் தீ இப்பொழுது உலகம் முழுவதும் கிறிஸ்துவின் உண்மையான சுவிசேஷத்தை அறிவித்துவிட்டது.

---


# `ôúXôm ª `ù]¬ ù_TdáÓûL

| நாள் | நேரம் |
| --- | --- |
| **10.10.2011, சனிக்கிழமை** | **மாலை 5.00 மணி முதல் 7.00 மணி வரை** |

*இடம் :* **ஷாலோம் கிளை அலுவலகம்,**
M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்)
வடக்குத் தெரு, மார்த்தாண்டம்

*யாவரும் குடும்பமாய் கலந்து கொண்டு ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் அன்பாய் அழைக்கிறோம்.*

தொடர்புக்கு

**சகோ. செல்வதுரை,** Cell : 94876-89869,
**சகோ. ஜார்ஜ்,** Cell : 98944-78405 **சகோ. கிங்பெர்ட்,** Cell : 94868-64820

## நாட்டு நடப்புச் செய்திகள்....

சூரியனைவிட சிறிய வடிவிலான அதிக வெப்பத்துடன் கூடிய இரண்டு புதிய சூரியன்களையும் அவற்றை சுற்றிவரும் புதிய கிரகத்தையும் அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் நாசாவின் சார்பில் விண்வெளி ஆராய்ச்சிக்காக கெப்ளர் என்ற விண்கலத்தை அனுப்பியது. அது எடுத்து அனுப்பிய சமீபத்திய படங்களைப் பார்த்து விஞ்ஞானிகள் ஆச்சரியத்தில் உறைந்தனர். ஆம்! அதில் இரண்டு சூரியன்களும் ஒரு புதிய கிரகமும் இருப்பது தெரிந்தது. பூமியில் இருந்து 200 ஆண்டு காலத்துக்கு சமமான தூரத்தில் உள்ள அந்தக் கிரகத்துக்கு கெப்ளர் 16பி என்று பெயரிட்டுள்ளனர்.

---

சென்னையை அடுத்த அரக்கோணத்தில் இருந்து 13.09.11 அன்று இரவு காட்பாடிக்கு பாசஞ்சர் ரெயில் ஒன்று புறப்பட்டுச் சென்றது. 9.00 மணி அளவில் அரக்கோணத்தை அடுத்துள்ள மேல்பாக்கம் சித்தேரி என்ற இடத்தில் அந்த ரெயில் சிக்னலுக்காக காத்து நின்றது. அந்த நேரத்தில் சென்னை கடற்கரையில் இருந்து அரக்கோணம் வழியாக வேலூருக்குச் செல்லும் மின்சார இரயில் வேகமாக வந்து கொண்டிருந்தது. கண் இமைக்கும் நேரத்தில் அந்த இரயில் நின்று கொண்டிருந்த பாசஞ்சர் ரெயில் மீது பயங்கரமாக மோதியது. இதில் 15க்கும் அதிகமானோர் பலியாயினர். 100க்கும் அதிகமான பயணிகள் படுகாயம் அடைந்தனர்.

---

காய்ச்சல் ஏற்பட்டால் அதன் தீவிரத்தை அறிய கருவி இருக்கிறது. இதய துடிப்பின் அளவை அறிய கருவி இருக்கிறது. தற்போது ஸ்டான்போர்டு பல்கலைக்கழக மருத்துவத்துறை விஞ்ஞானிகள் உடல் வேதனையையும், வலியையும் அளக்க ஒரு கருவியை கண்டு பிடித்துள்ளனர். இந்த கருவியைக் கொண்டு உடலில் உள்ள வேதனை, வலியின் அளவை கண்டுபிடித்து சிறந்த முறையில் சிகிச்சை அளிக்க இந்தக் கருவி உதவும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

நன்றி : www.dinakaran.com


**எங்களுடன் தொடர்பு கொள்ள**

தலைமை அலுவலகம்

**SHARING LOVE MISSION**

168/5, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.
Phone: 0461 - 2375468
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**

# கிராம ஆலயம்

## சாலபாடா குஜராத்



குஜராத் மாநில எல்லை முடிவு பகுதியில் மிகவும் உள்ளடங்கிய போக்குவரத்து வசதி மற்றும் அடிப்படை வசதிகளற்ற மலைப்பாங்கான கிராமம்தான் சாலபாடா. இங்கு வாழும் மக்கள் இறந்தவர்களின் ஆவிகளை தெய்வமாக வணங்குபவர்கள். இவர்களுடைய தொழில் திருடுவது மற்றும் சாராயம் காய்த்து விற்பதாகும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் பிறந்து வாழ்ந்தவர்தான் சகோ. மடுபாய் புரியா. இவர் ஒரு மந்திர கிரியைகளைச் செய்கிறவராக வாழ்ந்து வந்தார்.

சகோ. மடுபாய் என்னதான் அந்நிய தெய்வங்களுக்கும், இறந்தவர்களின் ஆவிகளுக்கும் மந்திர கிரியைகள் செய்தாலும் இவரது வீட்டில் சமாதானம் இல்லை. பலவிதமான இழப்புகளும், கஷ்டங்களும் தொடர்ந்து இருந்து கொண்டே இருந்தது. அவர்கள் வளர்க்கும் பசுமாட்டின் பால் இரத்தமாக வர ஆரம்பித்தது. அநேக மந்திரங்கள், பரிகாரங்கள் செய்தார் சகோ. மடுபாய். ஆனால் எந்த பயனுமில்லை.

மனம் உடைந்த சூழ்நிலையில் பக்கத்துக் கிராமமான விசல்பூரில் ஊழியம் செய்துவந்த சகோ. மத்தூர்புரியாவைக் குறித்துக் கேள்விப்பட்டு ஜெபிக்கும்படி அழைத்தார். சகோ. மத்தூர்புரியா வந்து இயேசுகிறிஸ்துவைக் குறித்துக் கூறி ஜெபித்தார். தேவன் பால் மாட்டிற்கு அற்புத சுகத்தைக் கொடுத்து நல்ல பால் கறக்கும்படியாக கிருபை செய்தார். பிறகு சகோ. மடுபாயின் மனைவி பிசாசின் போராட்டத்தினால் மிகவும் கஷ்டப்பட்டார், அதற்கும் ஊழியரை அழைத்து ஜெபித்தார். தேவன் விடுதலை கொடுத்தார். ஆனாலும் இவர்கள் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்வில்லை. இந்த சூழ்நிலையில் இவரது மருமகளை பத்து பிசாசுகள் பிடித்து ஆட்டின, ஆகவே சகோ. மடுபாய் ஊழியரிடம் சென்றார். ஊழியரும் ஜெபித்துவிட்டு நீங்கள் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளுங்கள் தேவன் உங்கள் குடும்பத்திற்கு விடுதலையைக் கொடுப்பார் என்றார்.

அதன்பின் முழு குடும்பத்தாரும் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சராக ஏற்றுக் கொண்டனர். தேவன் அனைத்து விதமான போராட்டங்களில் இருந்து விடுதலை தந்து ஆசீர்வதித்தார். அதன்பின் இந்த கிராமத்தில் அவருடைய வீட்டில் ஊழியம் ஆரம்பிக்கப்பட்டு ஆராதனை நடத்தப்பட்டது. அங்கு தேவனை ஆராதிக்க ஆலயம் அவசியமாகவே தேவ நாமம் மகிமைப்படும்படியாக, அழகிய ஆலயம் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது. சகோ. நவல் புரியா அவர்கள் ஊழியம் செய்து வருகிறார்கள். இந்த கிராம ஆலயத்தை, சகோ. ஜெயந்த் தாமஸ் (தூத்துக்குடி), சகோ. ஜோசப் டேவிட் (சென்னை), சகோ. அசோக், (ராஜபாளையம்) ஆகியோர் குடும்பத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதி உதவியின் மூலம் கட்டப்பட்டதாகும்.

**ரூ. 2 இலட்சம் மதிப்பில் அல்லது ரூ. 1 இலட்சம் மதிப்பில் ஆலயங்களைக் கட்டிக் கொடுக்க முன் வாருங்கள்.**

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்



| | | |
|---|---|---|
| மாணவனின் பெயர் | : | **பர்வின் டாமோர்** |
| தந்தையின் பெயர் | : | நானாலால் டாமோர் |
| தாயார் பெயர் | : | காந்தாபேன் |
| பிறந்த நாள் | : | 08.05.2001 |
| படிக்கும் வகுப்பு | : | 6th Std., |
| சொந்த ஊர் | : | நால் |
| மாவட்டம் | : | பான்ஸ்வாடா |
| மாநிலம் | : | இராஜஸ்தான் |

## மாணவனின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:–

இவனுடைய தந்தை இயேசுவை அறியாத பீல் குடும்பத்தை சேர்ந்தவர். அசுத்த ஆவிகளை வணங்கி வந்ததால், குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் மாறி மாறி அசுத்த ஆவியின் பிடியினாலும், வியாதியினாலும் பாதிக்கப்பட்டார்கள். இவருடைய தந்தை அதிக பாதிப்புக்குள்ளானார். இதிலிருந்து விடுதலை பெற மருத்துவம் பார்த்தும், மந்திரவாதிகளை நாடியும் வியாதி அதிகமானதே தவிர குறையவில்லை. ஷாலோம் ஊழியத்தைக் குறித்துக் கேள்விப்பட்டு ஊழியரிடம் சென்று ஜெபித்தபோது தேவன் அற்புதமாக அசுத்த ஆவியின் பிடியிலிருந்தும், வியாதியிலிருந்தும் விடுதலை கொடுத்தார். தன்னை குணமாக்கிய தேவனுக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்ற வாஞ்சையில் 2004–ல் தன்னை தேவனுக்கு அர்ப்பணித்து தன்னுடைய சொந்த கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறார்.

**மாணவனைக் குறித்து :–** பர்வின் டாமோர் நன்றாக படிப்பான். ஒழுங்காக ஆலயத்திற்கு செல்பவன். கீழ்ப்படிதலுள்ள மாணவன். மிகவும் சுறுசுறுப்பானவன். படித்து முடித்து ஊழியக்காரனாக வேண்டும் என்றவாஞ்சை.

**ஜெபியுங்கள்:–** இவனுக்காக, இவனுடைய படிப்பிற்காக, நல்ல சரீர சுகத்திற்காக, பெற்றோர் செய்கிற ஊழியத்திற்காக ஜெபியுங்கள்.

**மாணவனைத் தாங்குபவர் :–** Mrs. Amirthavalli Johnson - Tirunelveli

நீங்களும் மாதம் ரூ. 500/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரை ஜெபித்துத் தாங்க முன் வரலாம். இன்னும் 330 குழந்தைகளுக்கு ஆதரவாளர்கள் தேவை. உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்குவதற்கு அறிமுகப்படுத்துங்கள்.